
# இருக்கிறம்

ஒரு பொல்லாப்புமில்லை

15-07-2007

பொதுசன நூலகம்



## இதுதான்டா தத்துவம்

## றொரன்ரோ ஆச்சிக்கு...


## தெளிவான இலக்கு



## வருகிறது ஹரி பொட்டர்

# வலி தருகிற வலி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




6 **ஏலி ஏலி லெமா சபக்தானி**
தேசியன்





**விடை பெறும் ஹரி பொட்டர்** 16





22 **வானொலி நினைவுகள்**
கே.எஸ். பாலச்சந்திரன்





**பட்சமுள்ள ஆச்சிக்கு** 28
சோக்கெல்லோ சண்முகம்





72 **ஸென் தத்துவங்கள்**




புதியதொரு சஞ்சிகையோடு உங்களைச்சந்திக்கிறோம்.

இங்கு யாரை நலம் விசாரித்தாலும், 'வாழ்கிறோம்' என்று சொல்லாமல் வெற்று வெறுமனே 'இருக்கிறம்' என்று சொல்கின்ற, எம் வாழ்வை பிரதிபலிக்கும் வார்த்தை மகுடத்தோடு உங்களைச் சந்திக்க வந்திருக்கிறோம். வாசிக்கத் தெரிந்த எல்லோருமே எங்கள் இலக்கு. தீராத யோசனைகளிலும், ஒன்றுமற்ற சூனியத்திலும் சிக்கிப் போனவர்களுக்கான சாய்மனை இது.சிந்தனைகளைத் தூண்டி சமூகத்தை மாற்ற இது ஒன்றும் நெம்புகோல் அல்ல.

காகத்தை நாங்கள் இலட்சனையாய்க் கொண்டதற்கு ஆழச்சிந்திப்பவர்கள் ஆயிரம் காரணங்களைக் கூறலாம். எங்கள் அபிப்பிராயமோ மிக இலகுவானது. ஆயிரம் பறவைகளை ரசிக்கும் நீங்கள் விரும்பிக் கூப்பிட்டால் தேடி வருகிற ஒரே பறவை இந்த குப்பைக் காகம் மட்டும்தான்.

'இருக்கிறம்' சஞ்சிகை அரசியலை கையிலெடுக்க வில்லை. 'அஞ்சுவது அஞ்சாமை இழுக்கு' என்பதில் அதீத நம்பிக்கை கொண்டிருப்பதைத்தவிர இதற்கு வேறு காரணங்கள் இருக்கவில்லை.காலம் தரும் மாற்றங்களை மறுதலிக்காத எமது சஞ்சிகையின், நீண்ட பயணத்தின் ஆரம்பம் முதல் அடுத்தடுத்த அசைவுகள் அனைத்திலும் உங்கள் ஆதரவை வேண்டி நிற்கிறோம்.

நன்றி

உங்களை வெல்ல முயற்சிக்கும்,

ஆசிரியர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருக்கிறம்

இடம்

"எப்படிச் சுகமண்ணை"
"இருக்கிறம்;
ஏதேனும்
கப்பல் ஊர் வந்து கடைதிறந்து...
வாய்நிறைய
உண்டுறங்கி எத்தனை நாள்?
ஊர் விட்டு போக வள்ளம்
என்றைக்கு எவரறிவார்? ஊர் முழுக்க
களவு கொள்ளை.
இன்றைக்கும் காணாமற் போனோர்
இரண்டு மூன்றாம்.
மண்டை தீவில் நான்கு 'பொடி" கிடக்காம்.
கிழக்காலே
சண்டை நடக்கிறதோ தெரியவில்லை ...
தொடராக குண்டு முழங்கிடுது!
குருடாக்கி முடமாக்கும்
ஊரடங்கால் வீட்டுக்குள் ஒடுங்கி
பயநூலால்
சுவட்டை எமைச்சூழக் கட்டி... அடைகிடந்து
என்னவாய் 'உருமாறப்'
போறோமோ நாமறியோம்?

இடம்
வெள்ளவத்தை

"எப்படிச் சுகம் தம்பி"
"இருக்கிறம்;
நினைச்சதுபோல்
இப்ப கொழும்பில எதைச்செய்தும்
லாபமில்லை.
இடைக்கிடை வளைப்பு,
கடத்தல், உயிரச்சம்,
கெடுபிடிகள்
கடைசியாய் பேருந்து – இஞ்ச
சும்மா கொம்பியூட்டர் கிளாசென்று
பொழுது கழியுதன்றி புண்ணியத்துக்
கேதுமில்லை.
வெளிநாட்டு 'உதவி' முன்போல இல்லை ஏன்
சிலநாள்... சோற்றுச்
செலவுக்கும் வழிகளற்றுப்
பசித்திருந்து வெளியே பகட்டாய்ச்
சிரித்திருந்தோம்
ஊரில் வயல், உழைப்பு
உல்லாசம், உறவு, உரிமை
நூறிருந்தும் வந்து நொந்து
நொடிந்துள்ளோம்"

இடம்
ரொரான்டோ

'எப்படிச் சுகம்பிள்ளை'
இருக்கிறம் ;
மூச்சுவிட
எப்படி முடியும் ... ஓயாத இயந்திரமாய்
இருபது மணிநேரம்
இரண்டு மூன்று வேலைபார்த்து,
'இருப்பதற்காய்' எவரிடமோ இரந்து
சில சேர்த்து
நீலக் கடிதத்தை நிதமும் எதிர்
பார்க்குமூர்க்கு
மாதத்துக் கொருக்காய்
கிள்ளித் தெளித்துவிட்டு,
வாழ்வை மறந்து, வசந்தம் தனைத்
தொலைத்து
எங்கள் முகம்
எமது அடையாளம், மொழி, இயல்பை
எம்மோடிழந்து சடப் பொருட்கள்
ஆகின்றோம்–
இங்கிருக்கும் எங்கள் சண்டியரால்
இந்நாட்டோர்
எம்மை தரம் தாழ்த்தி
எடைபோட்டுப் புறக்கணிக்க
இரண்டாம் பிரசைகளாய், கறுப்புச்
சிறுமைகளாய்,
எங்கள் சுயம் கரைத்து
எம்பிள்ளை அந்நியராய்ச்
செல்வதைத் தடுக்க
முடியாமல்...சிறப்பாய்...
எல்லோரும் சௌக்கியமாய் ...
ஏதோ இருக்கிறம்
ஏதோ 'இருக்கிறம்'
என்பதுதான் உலகிலுள்ள
ஈழத் தமிழரிடம் எஞ்சியுள்ள மனநிலமை
ஆனால் ... இருக்கிறம்
'ஆம்... நாம் மடியவில்லை
வாழ்வோம்' எனும் உறுதி வார்த்தைதானே
நம்பிக்கை?
இந்த 'இருக்கிறம்'
என்னும் ஒரு தீர்மானம்
மந்திரம் போல் நிலைத்து
மாற்ற வேணும் வரலாற்றை!



# காத்திருக்கிறோம்!

'இருக்கிறம்' என்பது, ஒரு வாசிப்பு, ஒரு கருத்துப் பாகிர்வு, ஒரு பண்பாடு, ஒருவகை இருப்பின் பிரதிப்பலிப்பு. இவை எல்லாவற்றையும் ஜனரஞ்சகமாய் உள்ளடக்கும் தன்மையில் 'இருக்கிறம்' வருகிறது. ஒருவித எழுத்தாக்கப் புரட்சி. நிச்சயமாக இலங்கையில் முன்பு வெளி வராத ஒரு புதுமை.

எம்மவர்களுக்கு புதுமைகள் சாதிப்பது ஒன்றும் புதுசு அல்ல. உலகப் படத்தின் சின்னஞ்சிறு புள்ளி அளவில் இருந்தபடி தேமதுரத் தமிழோசையை உலகெங்கும் பரவ வழி செய்தவர்கள் நாங்கள். அன்றைய இலங்கைத் தமிழ் வானொலி தொடங்கி இன்று பூமிப்பந்தின் வான எல்லைகளெங்கும் ஊடறுத்து நிற்கும் அனைத்து ஊடகங்களும் எங்கள் தமிழ்ப் பற்றுக்கு சான்றாக உள்ளன. இவை போதாதென சென்றவிடமெல்லாம் பிரசுரங்களையும் சஞ்சிகைகளையும் உருவாக்கி வருபவர்கள் நாம். எம் மக்களின் ஆதரவுத் தளம் இன்றி இச்சாதனைகள் எதுவுமே சாத்தியம் ஆகியிருக்காது. தமிழ் பேசும் மக்களின் ஆதரவுத் தளத்தின் புதிய நாற்றாக 'இருக்கிறம்' இன்று முளை விடுகிறது.

உங்கள் ஆதரவுக் கரம் இன்றி 'காத்திருக்கும்' எங்கள் இருப்பின் கனவுகள் சாத்தியமாவதில்லை. எங்கள் தேடலும், ஆக்கமும் உங்களுக்கானவை. உங்கள் மூச்சில்தான் எங்கள் உயிர்ப்பு நிலைக்கும். உண்மையில் நீங்கள்தான் இதன் எல்லா அர்த்தங்களாகவும், சொல்லாகவும் அதன் பொருளாகவும் இருக்கிறீர்கள். இனிவரும் நாட்களில் இதன் வெளிப்பாடாகவும் இணைவீர்கள்! காத்திருங்கள்! காத்திருக்கிறோம்.

பதிப்பகத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏலி ஏலி லெமா சபக்தானி

## தேசியனின் அறிவியல் புனைக்கதை

அந்த இருவரும் தங்களுடைய கையிலிருந்த கடிகாரங்களை மீண்டும் ஒரு முறை பார்த்து சரியான காலத்துக்குத் தாம் வந்திருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்கள். இனிமேல் தாம் வந்த திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்ற அவசரம் அவர்களுக்கு. எங்கும் எந்தக் குழறுபடியும் நடந்துவிடக் கூடாது. ஏதாவது தவறு நடந்தால் மரணம் தான். தப்பிக்கவே முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும்.

'நாம் இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பதாம் ஆண்டிலிருந்து பின்னோக்கிப் பயணித்து இந்தக் காலத்துக்கு வந்தவர்கள் என்பது இங்கிருக்கும் யாருக்கும் தெரியக் கூடாது. அது மிக முக்கியமானது' என்று முதலாமவன் மீண்டும் வலியுறுத்தினான்.

'அதெல்லாம் மறக்க மாட்டன். என்ர மூளையின்ர நான்காவது அறையில இருப்பதைத் தான் இப்போதைய என்னோட ஞாபகத்தளமா வெச்சிருக்கிறன். ஆனபடியால் குழப்பம் நடக்க வாய்ப்பே இருக்காது. எங்கட உடை கூட இந்தக் காலத்து உடை போலவே தயாரிக்கப் பட்டிருக்குது.. எங்கட இந்த நடவடிக்கையில அதிகமாக் கவலைப்பட ஏதும் இருப்பதாக தெரியேல்லை' என்றான் அடுத்தவன்.


'சரி சரி.. உனது மூளையின் மொழித் தெரிவு ஆக்கியை செயற்பட வை.எங்கட வேலையை ஆரம்பிக்கலாம். அவர்கள் பேசிக்கொண்டே தங்கள் மணிக்கட்டில் இருந்த சின்ன கடிகாரத்தில் தத்தமது ஆட்காட்டி விரலின் நுனியிலிருந்து வந்த ஒளிக்கற்றைகளைக் கொண்டு சில மாற்றங்களை செய்து கொண்டார்கள்.

'சரி வா.. போகலாம்'. அவர்கள் இருவரும் நடந்தார்கள்.

'இயேசுவைத் தெரியுமா?.' பாதையில் எதிர்ப்பட்ட நபரிடம் விசாரித்தார்கள்.

' இயேசுவா ? அவனைத்தான் ஊருக்கே தெரியுமே. நீங்க ஆராக்கள்?

எங்கயிருந்து வாறீங்கள்?' வந்த வழிப்போக்கன் எதிர்க் கேள்வி கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் பக்கத்து கப்பர்நகூம் ஊரில் இருந்து வாறம். யேசுவைப் பாக்க வேணும். அதுதான்.....' இவர்கள் இழுத்தார்கள்.

'யேசுவா, அவன் எங்கேயாவது சுத்திக் கொண்டு இருப்பான். அவனை ஒரு இடத்துல பார்க்க முடியாது. நாலஞ்சு பேரைக் கூட்டிக் கொண்டு மலை, காடு எண்டெல்லாம் அலையிறதுதான் அவனுக்கு வேலையே' சலிப்போடு பதில் வந்தது.

'அவர் நிறைய அற்புதங்கள் செய்யிறதா பலரும் பேசுறாங்களே...'

'அவனா?, எனக்கென்னவோ அதில நம்பிக்கையில்லை. உண்மையைச் சொன்னா அவன் ஒரு விசரன். என்ன பேசுறம். எங்கே பேசுறம் எண்டெல்லாம் யோசிக்க மாட்டான். யாரைப் பார்த்தாலும் சண்டை போடுறது. தேவையில்லாம கொழுவல்களை விலைக்கு வாங்கிக் கொண்டு திரியிறது தான் அவனுக்குத் தொழில். யாரிட்ட எண்டாலும் எப்பயோ அடிப்பட்டுச் சாகப் போறான்?.'

'என்ன அப்பிடிச் சொல்றியள்? அங்க கப்பர்நாகூம்ல அவருக்கு நல்ல பேர் இருக்கு'

'அங்கே யாரையோ சுகப்படுத்தினதா சொல்றாங்கள். 'தம்பி, உங்களைப் பார்த்தா நல்ல ஆக்களாத் தெரியுது. நீங்களும் சும்மா அவனுக்குப் பின்னால சுத்தி உங்கட வாழ்க்கையை வீணாக்காதேங்கோ. ஏற்கனவே நாலஞ்சுபேர் வீட்டையும் விட்டுட்டு தொழிலையும் விட்டுட்டு அவன் பின்னால சுத்துறாங்கள். நீங்கள் ஒழுங்கா உங்கட குடும்பத்தைக் கவனியுங்கோ. அவன் போற போக்குத் துண்டாச் சரியில்லை, பேசுற பேச்சும் சரியில்லை.'

'அப்படியே சொல்றீங்கள்? அவனுக்கு அப்ப இஞ்ச நல்ல பேர் இல்லையோ?'

'நல்ல பேரோ? சத்தியமா அப்பிடியொண்டும் கிடையாது. அவன்பாவிக்கு ஒரு விசர்ப் போக்கு அவ்வளவுதான்'

**'வாழ்ந்த காலத்தில யாருக்குத்தான் மரியாதை இருந்தது. அதுக்கு இயேசு மட்டுமென்ன விதிவிலக்கே?'**

'இல்லை, அவற்ற நடவடிக்கைகள் ஒரு ஞானியாய் அவரைக் காட்டுது எண்டுறாங்கள்'

'சொல்றவங்கள் எல்லாம் சொல்லுவாங்கள். எனக்கு இதில எல்லாம் நம்பிக்கையில்லை. எனக்கு வேலை இருக்கு, நீங்கள் இப்படியே ஒரு நாலு மைல் தூரம் நடந்தீங்கள் எண்டா ,ஒரு வணக்க ஸ்தலம் வரும். அனேகமா இப்ப அவன் அங்கதான் இருப்பான்.போய்ப் பாருங்கோவன்'

'சரி ஐயா அங்க போய்ப் பார்க்கிறம்'

' அது கடவுளின்ர அருள் இல்லையோ..........'

'என்னடா இது? இயேசுவை இப்படி சொல்லிப் போட்டுப் போறான்?'

'வாழ்ந்த காலத்தில யாருக்குத்தான் மரியாதை இருந்தது. அதுக்கு இயேசு மட்டுமென்ன விதிவிலக்கே?'

'பாஸ்கா விழா வாறதுக்கு..இன்னும் ஒரு நாலைஞ்சு நாள்தான் இருக்கு எண்டு நினைக்கிறன். அதுக்குள்ள எங்கட திட்டத்தை செயல் படுத்தோணும்.

'அப்ப எங்களுக்கு.. அந்த நாலு நாள் போதுமே எங்கட திட்டத்த செயற்படுத்த?. அதுவும் இல்லாம நாங்கள் யாருக்குள்ளால எங்கட காரியத்தைச் சாதிக்குறது எண்டு முதல்ல முடிவெடுக்கோணும்.பிலாத்துவை பயன்படுத்துறதோ அல்லது யாராவது தேவாலயக் குருக்களோ?

"பிலாத்துவை நேரடியாச் சந்திக்க முடியுமோ எண்டு தெரியேல்லை ..ஒரு ஆலயக் குருவைப் பிடிக்கிறது உத்தமம் போல தெரியுது. சரி.. அப்படி எண்டா நாங்கள் எருசலேம் ஆலயத்துக்கே போவம்.

**'ம்ம்... கேட்கவே நல்லாயிருக்கு. பிறகு அமெரிக்கா எப்படியிருக்கும் எண்டு யோசிச்சுப் பார்த்தன் ஒண்டும் விளங்கேல்லை.'**

'இல்லையெண்டா நாங்கள் பேசாமா யூதாசைப் பிடிச்சு காரியத்தை முடிக்கலாம். அவன் தானே இயேசுவைக் காட்டிக் கொடுத்தவன்? என்ன சொல்றாய்?'

சரியா வருமே?'

'ஓம்.. எங்கட திட்டப்படி கிறிஸ்தவ மதம் எண்டு ஒரு மதம் இந்த உலகத்துல இருக்கவே கூடாது. அதுக்கு நாங்கள் பண்ண வேண்டியதெல்லாம் ஒண்டே ஒண்டுதான். இயேசுவைச் சிலுவையில அறைய விடக்கூடாது. இயேசுவை சிலுவையில அறைய விடாட்டா பிறகு உயிர்ந்தார் எண்டு யாரும் கதை அளக்கேலாது. எத்தினையோ பிரசங்கிகள் போல அவரும் ஒரு பிரசங்கி எண்டு சனம் கொஞ்சக் காலம் பேசிப்போட்டு மறந்துடும். கிறிஸ்தவ மதம் இருக்காது. திரும்பி நாங்கள் புறப்பட்ட இடத்துக்குத் திரும்பேக்க கிறிஸ்தவ மதம் அங்க இருக்காது.

'ம்ம்... கேட்கவே நல்லாயிருக்கு. அப்ப அமெரிக்கா எப்படியிருக்கும் எண்டு யோசிச்சுப் பார்த்தன் ஒண்டும் விளங்கேல்லை.'

'அதை எல்லாம் நாங்கள் போய்ப் பார்க்கலாம். கவலைப்படாத...நாங்கள் இப்ப யூதாஸைப் பிடிப்பம்.

அவர்களின் திட்டம் இப்ப இயேசுவுக்குச் சிலுவைச் சாவு என்ற தீர்ப்பை வழங்கியவர்களை விட்டு விட்டு இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸின் பக்கம் திரும்பியது. எருசலேம் தேவாலயத்துக்கு அருகில் யூதாஸும், இயேசுவின் மற்ற சீடர்களும் நின்று கொண்டிருந்தார்கள்.

'யூதாஸ்....இங்கே வா..'

யூதாஸ் திரும்பினான். இதுவரை சந்தித்திராத இரண்டு மனிதர்கள் அவனுக்கு எதிரே நின்று கொண்டிருப்பதைக் கண்டு நெற்றி சுருக்கினான்.

'என்ன விஷயம்... நீங்கள் யார்?'

'அதெல்லாம் பிறகு பேசலாம். இப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் ஒரு விசயத்தைச் சொல்றம் கவனமாக் கேள். உனக்கு எவ்வளவு பணம் வேணும் எண்டாலும் தரலாம்.

என்ன சொல்றியள்..நீங்கள் ஆர்?'

'அதெல்லாம் பிறகு பேசலாம். இப்ப ஒரு விசயத்தைச் சொல்றம் கவனமாக் கேள். பணம் தாறம்.

'என்ன விஷயம்? அதைச் சொல்லுங்கோ முதல்ல.

'நீ.. இயேசுவைக் காட்டிக் கொடுக்கப் போறதாக் கேள்விப்பட்டம் உண்மையே?'

'அது...அது உங்களுக்கு எப்படித் தெரியும்?'

'அதைவிடு. இப்ப விசயத்தைச் சொல்றன் கேள். நீ இயேசுவைக் காட்டிக் கொடுக்க வேண்டாம். இயேசுவை அவங்களே கொல்லுவங்கள்..'

யூதாஸ் சத்தமாகச் சிரித்தான். 'அதுதான் உங்கட கவலையே? அடப்பாவியளே? இயேசுவை அவங்களால கொல்ல முடியாது. இதுக்கு முந்தியும் நிறைய தரம் இப்படி அவரைக் கொல்லப் பார்த்த-வங்கள். ஆனா முடியேல்ல. அவர் பெரிய ஆள்... நான் சும்மா அவரைக் காட்டிக் கொடுத்திட்டு போடுவன். அவர் மறைஞ்சு-டுவர். எனக்குக் கிடைக்கிற முன்னூறு வெள்ளிப்பணம் மிச்சம்.

'முன்னூறோ ? முப்பதில்லையே?'

'அந்த முப்பது முற்பணம் மட்டும்தான் .!....'

'அப்படியே. அந்த விசயம் எங்களுக்குத் தெரியாது. ம்.. சரி..அதெல்லாம் இருக்கட்டும். உனக்கு வேணுமெண்டால் ஐநூறு வெள்ளிப்பணம் தாறம். நீ அவரைக் காட்டிக் கொடுக்காத...

"என்னடா சுத்த விசரராய் இருக்கிறியள். நான் இண்டைக்கு ராத்திரி அவரைக் காட்டிக் கொடுக்க வேணும். இல்லையெண்டா என்னை அவங்கள் எல்லாருமா சேர்ந்து கொண்டு-போடுவங்கள்...

'அதுக்கென்ன, எப்பிடியெண்டாலும் நீ தற்கொலை செய்யிறவன் தானே!'

'உங்களுக்கென்ன லூசே? நான் ஏன் தற்கொலை செய்யோணும்?.'

'உன்ர தலைவர் இயேசு அடிப்பட்டுச் சாகிறதையும். சிலுவையில அவர் தொங்கறதையும் நீ பார்ப்பியே?'

'இயேசு சாகிறதோ? ம்ம்..உங்களுக்கு ஏதோ விசர் பிடிச்சுப் போட்டுது எண்டு நினைக்கிறன்... இரண்டு நாள் கழிச்சு இயேசுவிட்டயே வாங்கோ. சரியாக்கலாம். யூதாஸ் சிரிச்சுக் கொண்டே போனான். அவர்கள் இருவருக்கும் படு குழம்பமாய் இருந்தது.

'ம்ம்.. இப்ப என்ன செய்யிறது? எங்களுக்கு இன்னும் ஒரே ஒரு நாள் தான் கிடக்கு. இண்டைக்கு இயேசுவைப் பிடிச்சுடுவங்கள். பிறகு நாளைக்கு காலம்பிறை ஒன்பது மணிக்கெல்லாம் கொல்லுவாகள், எங்களுக்கு இன்னும் கொஞ்ச நேரம் தான் இருக்கு...

ம்ம் இப்ப ஒண்டும் பண்ணேலாது. எதுக்கும் கால்ம்புற போய் பிலாத்தோட பேசுவம்.

அவர்கள் தங்கட முதல் திட்டம் தோத்துப் போன ஏமாற்றத்தில் ஆலய ஓரமாய் அமர்ந்து கொண்டார்கள்.

*முடிவுக்கு அடுத்த இதழ்வரை காத்திருங்கள்...*

# குண்டக்க மண்டக்க!



வடிவேலு யப்பா! உன்னைய நான் டிரைவரா சேத்துக்கிடறேன். ஸ்டார்டிங் சம்பளம் ரெண்டாயிரம் தாரேன். ஓக்கேவா?
பார்த்தீபன் உங்களுக்கு பெரிய மனசு ஸார்!
வடிவேலு இருக்கட்டும் இருக்கட்டும்!
பார்த்தீபன் ஸ்டார்டிங் ஸாலரி ரெண்டாயிரம் ஓகே. இந்த டிரைவிங் சம்பளமா எவ்வளவு கொடுப்பீங்க ?
வடிவேலு ஆகா!! கௌம்பிட்டானே...

வடிவேலு அட ! இந்த டிரஸ் உனக்கு சூப்பரா இருக்குப்பா!! பொங்கலுக்கு எடுத்ததா?
பார்த்தீபன் இல்லை எனக்கு எடுத்தது
வடிவேலு ?!?!

வடிவேலு தம்பி தம்பி ! இங்க வா. இந்த தெருவுல பஞ்சர் எங்க ஒட்டுவாய்ங்கன்னு தெரியுமா?
பார்த்தீபன் ட்யூப்ல எங்க ஓட்டை இருக்கோ அங்கதான் ஒட்டுவாங்க!!
வடிவேலு ?!?!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏ.எஸ்.எம்.நவாஸ்**

# அனுதாபிகள்

எப்போதுமே ஆட்டோக் காரர்கள் என்றால் 'புலம்பிகள்' என்ற அபிப்பிராயம் என்மனதில் உண்டு. இன்றுவரை ஆட்டோ ஓட்டுபவர்கள் ஓரளவு வசதியாக வாழவே செய்கின்றனர். பெற்றோல் விலை லீட்டருக்கு ஐந்து ரூபாய் கூடினால் கூட இவர்கள் ஒரு 'ஹயருக்கு' பத்து ரூபாய் வீதமாக அதிகரிப்புச் செய்து விடுவர். நம்மூரில் கிடுகிடுவென ஏறிவிடும் விலைவாசிப் பட்டியலில் பெற்றோலும் அடங்கும். இதனால் சிரமப்படு-கின்றவர்கள் வாகன உரிமையாளர்கள் அல்ல சாதாரண மக்கள்தான். பஸ் கட்டணமும், ஆட்டோ கட்டணங்களும் உயர உயர பாதிக்கப்-படுவது பொது மக்கள்தானே.... விலையேற்றப் பொதியை சுமப்பதென்றால் சாதாரண விடயமா?

என்ற போதும் இந்த ஆட்டோ சாரதிகளிடம் போலியான ஓர் அனுதாபம் மேலிடுவதை நாம் காணலாம், நாம் பஸ்ஸூக்காக காத்திருப்பது தெரிந்தும் நம்மருகிலேயே ஆட்டோவை நிறுத்தி "எங்கே போறீங்க.... இவ்வளவு தாங்க .." என பேரம் பேசத் தொடங்கிவிடுவார்கள். தூரம் போகும் பயணிகள் செய்வதறியாமல் ஏறிவிடுவார்கள். ஏறியபின்னர்தான் இவர்கள் வித்தையை அறிவார்கள். "பெற்றோல் விலை கூடிப் போச்சு... "ஆட்டோ ஓட்டுறவனுக்குத்தான் வருத்தம் தெரியும்; கொஞ்சம் அதிகமாபாத்து கொடுங்க தொர" என்று புலம்பத் தொடங்கி விடுவார்கள். ஏறியவர்களும் வேறு வழியின்றி இந்தச் சாரதிகளின் சதிக்கு சாய்ந்து விடுவார்கள். இவ்வகையான ஏமாற்று நாடகங்கள் நேரம் பிந்-திய இரவுகளில்தான் நடப்பதுண்டு. இந்நேரங்க-ளைப் பயன் படுத்தியே ஆட்டோச் சாரதிகள் அதிக லாபமும் தேட எண்ணுவதுண்டு.

அன்று நடந்து கொண்டிருக்கிறேன். கிறாண்ட்பாஸில் எந்தத் திசையை நோக்கி நடந்தாலும் தெரிந்த முகங்கள் கண்ணில் பட்டுக் கொண்டே இருக்கும். நூற்றில் மூன்று முகங்களாவது எனக்குத் தெரிந்த முகங்களாகவே இருப்பதுண்டு.

இரவு 10.30 மணியிருக்கும். நேரம் சென்று விட்டதை உணர்ந்தவனாக விறுவிறுவென நடக்கிறேன். பஸ்ஹோல்டை நெருங்கி விட்டேன். குளிரூட்டி பஸ்கள் கூட பயணிகளை நெருக்கி அடைத்துக் கொண்டு சென்றது. மாபோளைக்குப் போக வேண்டும். பஸ்ஸூக்காக காத்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான் எனக்குத் தெரிந்த முகங்கள் எனது இரு பக்கமும் நின்று கொண்டிருந்ததை அவதானித்தேன். ஒருவர் எனக்குத் தெரிந்த குமார் என்ற நண்பர். மற்றவர் ஒரு பெண். 45 வயது மதிக்கத் தக்க பெண்மணி தன் சிறிய மகளுடன் பஸ்ஸூக்காக காத்து நின்றார். நாங்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்தோம் "எமது ரூட்டுக்கு பஸ்கள் இப்போது குறைவுதான். எல்லாம் அரசியல் பழிவாங்கல்கள்" என்றேன். வந்தப் பெண்மணியும், நண்பரும் ஆமோதித்தார்கள். தந்போதைய அரசியல் யதார்த்தங்களை மக்கள் நன்றாகப் புரிந்து ளார்கள். அவர்களது அரசியல் சம்பாஷணையிலும் அதைப் புரிந்து கொள்ள முடிந்தது. பேசிக்கொண்டி-ருந்தோம். நேரம் சற்றுச் கடந்து கொண்டிருப்பது அப்போதுதான் எமக்கும் புரிந்தது. ஒரு ஆட்டோ சாரதி எம்மிடையே வந்து நிறுத்தினார். 180 ரூபாய் கேட்டார். அனுப்பி விட்டோம் யார் அவன் என்றும் எமக்குத் தெரியாது. "பஸ் இருக்குது தம்பி... பஸ் வரும் பயப்படத் தேவையில்லை" என்று ஒருவர் எமக்கு ஆறுதல் கூறினார்.

எம்மைத் தாண்டிச் சென்ற ஆட்டோ ஒன்று சடுதியாக பிரேக் போட்டு நின்றது. ட்ரைவர் சீட்டிலிருந்து ஆட்டோக்காரர் கழுத்தை நீட்டினார். எனக்குத் தெரிந்த மனிதர். மாபோளைதான் அவரும் . கதைத்தேன் "ஒரு 150 தாங்க ..." என்றார். நான் அவரிடம் "என்ன நானா அப்படி சொல்றீங்க நீங்க போற வழிதானே, கொறைச்சு எடுங்க" என்றேன். என்னையும் என் அருகில் நின்றிருந்த அந்த இருவரையும் சாரதி பார்த்தார். தெரிந்த முகம் என்ற போதும் அந்த ஆட்டோ சாரதி என்னிடம் "சரி எவ்வளவு தாறீங்க என்று கேட்டார். நான் 100ரூபாய் பேசி மேலதிகமாக 20ரூபாய் போட்டுத் தாரேன் ...பாவம் அந்தப் பெண். தனியாகத் தன் மகளுடன் நிற்கிறாள். உதவி செய்யுங்க" என்று நான் சொன்னதும், தெரிந்த அந்தச் சாரதியின் முகம் "சரி" என சமிக்ஞை செய்தது. ஏறிக் கொண்டோம். தொட்டலங்க நெருங்கு முன்பே சாரதியின் புறுபுறுப்பு ஆரம்பித்தது. "பஸ் கெடைக்கலையா?" என்று கேட்டார். நான் அதற்கு "இரண்டு மூன்று இன்டர் சிட்டி பஸ்கள் வந்தது. சரியான நெரிசல் இருக்க முடியாது... இந்தப் பெண்ணும் பாவம்தானே...." என அந்தப் பெண்ணைக் குறித்துச் சொன்னேன். அதற்கு சாரதி "ஏன் தொங்கிக்கிட்டு போக வேண்டியதுதானே...." என்று குத்தலாக .... ஒரு வார்த்தையை உதிர்த்தார். உதிர்த்தவை அவரது உள் மனதிலிருந்து உண்மையாக வெளிப்பட்டவை . நாங்களாக ... அவரிடம் வலியச் சென்று பேரம் பேசாமல் ஏறவில்லையே ? பிறகேனோ அவர் இப்படி வார்த்தைகளைக் குத்தலாகப் பேசுகிறார் ? எனக்கு அந்தச் சாரதியின் நோக்கம் புரிந்து விட்டது. அவருக்கு அந்தப் பெண்ணும் ஏறியது பிடிக்கவில்லை போலும். இப்படியென்றால் ஏன் எம்மை ஏற்றினார் .....? நான் ஒன்றும் பேச வில்லை. மனதுக்குள் மௌனக் கணக்கைப் போட்டுக் கொண்டு வந்தேன். பல காலமாக எனக்குத் தெரிந்த அந்த சாரதியின் முகம் என் மனதில் அகோரமாக மாற்றம் பெற்றது. ஒரு அனுதாபி போல் எம்மை அழைத்து ஏற்றியவன் இப்படிப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுகிறானே எல்லா ஆட்டோச் சாரதிகளுமே இப்படித்தானா என என்னை எண்ண வைத்தது.

வத்தளை நெருங்க எம்முடன் ஆட்டோவில் வந்த குமார் என்ற நண்பர் இறங்கிவிட்டார். மிஞ்சியது நானும் அந்தப் பெண்மணியும், அவரது மகளும். இப்போது மீண்டும் அந்த ஆட்டோச் சாரதி புலம்பத் துவங்குகிறான் "இவங்களும் வத்தளையில்தான் எறங்கனும்னாங்க? ஆங் ஆனா எறங்காம இருக்காங்க..." என்று சாரதி புலம்ப நான் "மாபொளைக்குத்தான் அவங்களும் வாராங்க...நாங்க ஒங்களுக்கு காசு தாறோம்... கொஞ்சம் பேசாம ஆட்டோவை ஓட்டுங்க" என்றேன் சற்றுக் கோபமாக. எனக்குள் இருந்த கோபத்தை முழுமையாக காட்டிக் கொள்ளவில்லை. காரணம் அந்தச் சாரதி எனக்குத் தெரிந்தவர். அந்தப் பெண்ணும் எதையும் தவறாக எண்ணிவிடக் கூடாது. முடியுமானவரை அமைதியாகவே இருந்தேன். அந்தப் பெண்ணும் தான் இறங்கும் இடம் வரை எதையும் பேசாமல் பயணித்தார். கோணல் முகத்தோடு ஆட்டோவை ஓட்டும் அந்தச் சாரதி எம்மினத்தவன்தான். எந்த இனத்தைச் சேர்ந்தவனாய் இருந்தால் என்ன...? மனிதாபிமானம் இல்லாத எல்லாருமே ஒரே இனத்தவர்கள்தான். மதம்,இனம் என்பவற்றுக்கு அப்பால்பட்டு மனம் கோணியவர்களுக்கு என்று ஒருவகை தனித்த குணமுடைய இனம் இருக்க வேண்டும் என எனக்குப் பட்டது.

அந்தப் பெண் இறங்குமிடம் வந்தது. அவள் இறங்கிக் கொண்டாள். எனக்கு நன்றி சொல்லிவிட்டுச் தன் பாதையில் நடந்தார். சாரதியின் முகத்தையே அவர் பார்க்கவில்லை. அதுவரை என்மனதில் போட்டு வைத்திருந்ததை சாரதியிடம் வார்த்தைகளால் உடைக்கத் துவங்கினேன். "நீங்கள் எனக்கு நன்றாகத் தெரிந்தவர். ஒரே ஊர். இருந்தும் நீங்கள் அந்தப் பெண்ணிருக்கும் போதே குத்தலாக அப்படி பேசி இருக்கக் கூடாது" என்றேன் . அவன் ஏதோ ஒரு நியாயத்தை சொல்ல முற்பட்டான். அதை நான் முந்திக்கொண்டேன்...... "உங்களுக்கு வேண்டுமானால் நான் பணம் அதிகமாகத் தருகிறேன் .....ஆனால் அனுதாபி போல் நடித்து யாரையும் மனம் நோகச் செய்யாதீங்க, இன்னிக்கு என் மனசை குளிர வச்சதுக்கு ரொம்ப நன்றி இதற்குப் பின்னும் உங்க ஆட்டோவில ஏறமாட்டேன். இதுதான் கடைசி" என்ற நான் அவனுடைய முகத்தையும் பாராது அப்பால் சென்று விட்டேன்.

அன்றிரவு தூக்கமும் வரவில்லை. இம்மதிரியான மனிதர்களும் நம்முலகில் வாழத்தானே செய்கிறார்கள். இனியும் இம்மாதிரி அனுதாபிகள் போல் வந்து எம்மை ஏற்றிய பின் ஏமாற்றும் ஆட்டோச் சாரதிகளிடம் மிகக் கவனமாய் இருக்க வேண்டும் என நினைத்தது என் மனசு. அவன் குத்தலாகப் பேசிய ஒரு வார்த்தை என்னைத் தூங்க விடாமல் செய்தது.



## என்ன நாடகம் பார்க்கிறீங்க?

கணவர் ஒருவர் மிகுந்த கவலையுடன் டாக்டரிடம் சென்றார். "டாக்டர் என் மனைவிக்கு இப்போது கொஞ்சம் காது கேட்பதில்லை போல இருக்கிறது. என்ன செய்வது" என்று கேட்டார்.

வீட்டிற்கு சென்று 15 அடி தூரத்தில் நின்று "என்ன நாடகம் பார்க்கிறாய்" என்று கேளுங்கள். மனைவி சரியாக பதில் சொல்ல வில்லையென்றால், கொஞ்சம் கொஞ்சமாக அருகில் சென்று அவர் பதில் கூறும் வரை கேட்டுப்பாருங்கள்" என்றார் டாக்டர்.


கணவனும் மாலையில் வீட்டிற்கு சென்று 15 அடி தூரத்தில் இருந்து "என்ன நாடகம் பார்க்கிறாய்?" என்று மனைவியிடம் கேட்டார். பதில் இல்லை, மேலும் நெருங்கி நெருங்கி வந்து" என்ன நாடகம் பார்க்கிறாய்" என்று கேட்டார். மனைவி கோபத்துடன் கூறினார் "இத்தோடு ஏழு தடவை கூறி விட்டேன் "கணவருக்காக" நாடகம் என்று.

சர்வதேச சமாதான முயற்சிகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடை பெறும் ஹரி பொட்டர்

**உ**லகின் வாசிக்கும் மற்றும் அதிசயங்களை நேசிக்கும் சிறுவர்களை வியக்க வைக்கும் ஹரி பொட்டரை தெரியாதவர்கள் இருக்க முடியாது. ஹரி பொட்டர் கதைத் தொடரின் ஏழாவதும் இறுதியுமான பாகம் **Harry Potter and the Deathly Hallows** ஜுலை 21 ஆம் திகதி வெளிவருகிறது.

***J.K.Rowling*** தான் படைத்த அதிசய உலகில் இருந்து இப்பாகத்தோடு விடைபெறுகிறார். அமெரிக்காவில் இருந்து ***Harry Potter and sorcerer's stone*** என்ற தனது முதலாவது நூலில் அவரால் உயிர்பெற்ற ஹரி பொட்டர் அத்தொடரின் இறுதிப் பாகத்தையும் தாண்டி உயிர் வாழப்போகும் பாத்திரப் படைப்பாகும். பெரும் பரபரப்பை ஏற்படுத்திய முதலாவது பாகத்தையடுத்து படங்கள், வீடியோ கேம்ஸ் என்று பல வடிவங்களில் 377 மில்லியன் பிரதிகள் உலகெங்கும் விற்பனையாகித் தீர்ந்தன. ஹரி பொட்டர் வெளியானதும், அது மாற்றம் பெற்ற மொழிகளின் எண்ணிக்கை மிகக்குறுகிய காலத்தில் 63 என்பது ஆச்சரியங்களை தோற்றுவிக்கிறது.

***Hogwarts school » witchcraft and wizardry*** என்ற மாயதந்திரப் பாடசாலையில் அல்பெஸ் டம்பெல்டோ என்ற தலைமை ஆசிரியரின் கீழ் மந்திர வித்தைகளை கற்கும் ஹரிபொட்டர், தன் பெற்றோரை தீய சக்தியால் கொலை செய்த வோட் வோல்ட மோர்ட்டுடன் போராடுவதே கதை.

ஹரி பொட்டர் நாவலின் வெற்றியால் ஆங்கில இலக்கிய உலகின் மிகப்பெரும் பணக்கார எழுத்தாளராகியுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றௌலிங் ஆரம்பக்காலத்தில் தேனீர்க் கடை ஓரங்களிலேயே தனது அதிக நாட்களை கழித்தவர். ஆற அமர இருந்து எழுதுவதற்கு இடம் இல்லாமல், தனது குழந்தையுடன் நடுங்கும் குளிரில் அவஸ்தைப்பட்ட தனித்த பெண் - ரௌலிங் இன்று சுமார் ஐயாயிரம் கோடி ரூபாய்க்கு சொந்தக்காரர்.அதற்குக் காரணம் அவரது எழுத்து ஆழுமைக்கு அப்பால், அவரிடமிருந்த தனித்த ஆழுமை.

தான் பயணிக்கும் பேரூந்துகளின் பயணச் சீட்டுக்களின் பின்புறங்களிலும், சிறு சிறு காகிதங்களிலும் எழுதுவதற்கே அவரது கையிருப்பு அன்று இடமளித்தது. இன்றோ அவரது நாவலின் கடைசி பாகத்தை ஸ்காட்லாந்திலுள்ள மிகப் பிரபலமான சொகுசு ஹோட்டல் ஒன்றில் இருந்து எழுதி முடித்திருக்கிறார்.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் ரௌலிங் இருந்து கதை எழுதிய தேனீர்க் கடை தற்போது சுற்றுலா பயணிகள் நிரம்பும் இடமாக மாறியுள்ளது. அவர் கடைசிப் பாகத்தை எழுதிய ஹோட்டல் அறையையும் சுற்றுலா பயணிகளுக்காக ஒதுக்கி பணம் குவிக்கும் எண்ணத்தில் ஹோட்டல்காரர்கள் திட்டமிட்டு வருகிறார்கள்.


ஹரி பொட்டரின் இறுதிப்பாகமான **Harry Potter and the deathly Hallows** ஐ எழுதி முடித்தபோது ரௌலிங்கின் கண்கள் கலங்கியிருந்தன. ஹாரி பொட்டர் ஏழாவது பாகத்துடன் முடிவடையும் என்று நன்றாக தெரிந்த போதும், அதை முடித்தபோது, தனக்குள் எழுந்த துக்கத்தை தன்னால் கட்டுப் படுத்த முடியவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.




பரபரப்புக்கும், விற்பனைக்கும் பஞ்சமில்லாத ஹரி பொட்டரை வாங்க அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் கடைகள் திறக்கு முன்னரே கூட்டம் நிரம்பி வழியும் என்பது உறுதி. ஆங்கில மொழியிலான ஹரி பொட்டர் நாவலை இங்கிலாந்தின் புலும்ஸ்பரி, அமெரிக்காவின் ஸ்கொலஸ்டிக் பிரெஸ். அவுஸ்திரேலியாவின் அலென் அன்ட் அன்வின் கனடாவின் ரெயின் கொஸ்ட் புக்ஸ் என்பன வெளியிடுகின்றன

ஹாரி பொட்டரின் ஏழாவது பாகத்தின் பிரதிகளின் எண்ணிக்கை 12 மில்லியன் என வெளியீட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

புத்தக வெளியீடுகள் பலவற்றில் முதல் பிரதியை பெறுபவர்கள் மாத்திரமே வருகை தரும் விழாக்களை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கும் எமக்கு ஹரி பொட்டர் பெருமூச்சு விட வைக்கிறது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்




நாய் பலவீனங்களிலிருந்து
தனக்கான அபிப்பிராயங்களை உருவாக்குகின்றது
இன்னொரு வீழ்ச்சிபற்றி குரைக்கும் போது
தனக்கான வீழ்ச்சியின் கற்களையும்
முதுகில் தாங்கியபடியே
ஆட்டுகின்றது வால்
தனக்கான கடவுளும்
தான் பேசும் அரசியலும்
நரிகளிலிருந்தே ஆரம்பிக்கிறதென
நாயும்
நரிகளின் குரல்களில் ஊளையிட்டால்
பிரதிஸ்டை செய்து பீடத்தில் ஏற்றப்பட்டு
குழாத்து சொறிதல்களும் சொகுசாய்க் கிடைக்கலாமெனினும்.....
பரிகள் நரிகளாயினும்
நாய்கள் நரிகளாவதில்லை
நாயை நோக்கி ஊளையிடும் நரிகள்
நேற்று போலிப்புன்னகைகளை
வீசிய முகமூடிப்பசுக்களென
மூடித்திறக்கும் படலைகள் அடையாளம் வைத்துச் சொல்கின்ற
வன்மத்திலிருந்து வன்மத்தையும்
சூழ்ச்சியிலிருந்து சூழ்ச்சியையும்
குரல்வளைகளைக்கிழித்து திருப்பிக்கொடுக்கும்
வன்முறை நாய்களுக்கும் தெரியும்
தன்னில் பரிவு கொள்ளும் மழலைகள்
துயில் கலைந்து
சித்தம் கலங்கிடுமெனும் கவலையில்
மூர்க்கமாய் குதறிக்கடிப்பதை நெடும் நாட்களாய் மறந்திருந்தாலும்
தீட்டிக் கொள்கின்றது வேட்டைப் பற்களை
நாய்

-இளங்கோ-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானொலிக் கால நினைவுகள்



'அன்னை றைற்'

வானொலியோடு எனது தொடர்பு எப்போது ஆரம்பமானது?

ஆதி, அந்தம் இல்லா அருட்பெருஞ் சோதியே என்று பாடலாம் போலத் தோன்றுகிறது. அவ்வளவு நீண்ட காலம். எங்கள் ஊரில் வானொலி பாடிய முதலாவது வீடு எங்கள் வீடு என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம்

( வேறு யாரும் உரிமை கோரவில்லை என்பதுதான் உண்மை )

ஹிஸ் மாஸ்டர்ஸ் வொயிஸ் வானொலி, அக்கால அமைதியான இரவுகளில், வெகுத்தூரம் வரை கேட்கும். மாலையானதும், அப்பா வானொலியை பக்குவமாக கொண்டு வந்து முன் மேசையில் வைத்து, கார் பட்டறியோடு இணைப்பை ஏற்படுத்தி, குமிழ்களை முறுக்க, 'கற,புற' சத்தங்களிடையே மதறாஸ் 1, மதறாஸ் 2 எல்லாம் கடந்து திருச்சி நிலையத்தில் வந்து நிற்கும்.



அதுவும் மார்கழி மாதத்தில், இசை விழா காலமென்றால் கர்நாடக இசை வெள்ளம் பாய்ந்தோடி வரும். முற்றம் முழுவதும் அண்-டை,அயலார் கூட்டம்.

அம்மா குசினிக்குள் போய், போய் வந்து எல்லோருக்கும் தேனிர் உபசாரம் நடக்கும். நல்ல நாள் பெரிய நாள் வந்து விட்டால் வடை, மோதகம், கொழுக்கட்டையும் தேனீரோடு கூடவே வரும்.

திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையின் நாதஸ்வரக் கச்சேரி, எம்.எஸ்.சுப்புலட்சுமியின் கானாம்ருதம், சீர்காழி கோவிந்தராஜனின் தித்திக்கும் தமிழ் கீதங்கள் அங்கு, இங்கெலாம் நிறைக்கும். பேச்சொலிகள் அடங்கி, தலைகள் ஆடும்.

"ஆகா இதல்லோ வாசிப்பு. மனுசியின்ரை குரல் தேன்தான்"

"கோடி கொடுத்தாலும் பெறும்"

இப்படி இடையிடையே விமர்சனக் குரல்கள் கேட்கும்.

'கதையை விட்டிட்டு பாட்டைக் கேளுங்கோவன்.'

அப்பாவின் ஆணையில் அவ்வொலிகளும் அடங்கி விடும். இரவு எத்தனை மணி வரை கச்சேரி நடந்தது என்பது அநேகமாக எனக்குத் தெரியாமல் போய் விடும்.

முற்றத்தில் அப்படியே உறங்கிப் போய்-

"மேலெல்லாம் மண்...நித்திரை வந்தால் போய் படாதையன்"

அம்மா பேசிக்கொண்டே எனது மேல், காலெல்லாம் அப்பியிருக்கும் மண்ணைத் துடைத்து விடுவது கனவு போல இருக்கும். இப்படியாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனேகமான மாலைப்பொழுதுகள் என்னைப் பொறுத்தவரையில் சங்கீதப் பொழுதுகளாகப் போயின.

இலங்கை வானொலி மிக அரிதாக, அக்காலத்தில் எங்கள் வீட்டில் ஒலிக்கும்.

ஆடிவேல் திருவிழா, கச்சேரிகளின் நேர்முக அஞ்சல், நல்லூர்த் தேர்த் தீர்த்த நேர்முக வர்ணனை

இலங்கையர் கோனின் "விதானையார் வீடு" நாடகம்.

இவைதான் அந்த விதிவிலக்குப் பெறும் நிகழ்ச்சிகள்.

முதல் இரண்டுக்கும் சங்கீத அபிமானமும், சமய அபிமானமும் காரணம் என்றால், மூன்றாவதற்கு ஊர் அபிமானம் காரணமாக அமைந்தது.

விதானையார் வீட்டில் விதானையாராக நடித்த கே. சிவத்தம்பியும், வேலைக்காரனாக நடித்த கே.மார்க்கண்டனும் எங்கள் ஊரான கரவெட்டியைச் சேர்ந்தவர்கள் என்பதுதான் அது.

இருவருமே நான் அப்போது படித்துக் கொண்டிருந்த விக்கினேஸ்வராக் கல்லூரியில் படித்தவர்கள் என்பது எனக்கு பெருமையாக இருந்தது.

அவர்கள் எனக்கு ஆதர்ஸ புருசர்கள் ஆகியது இதனால் தான்!

கார்த்திகேசு சிவத்தம்பி ஒரு பீ.ஏ. பட்டதாரியாக கொழும்பு சாஹிராக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலம் அது.

எனது சிறிய தந்தையாரின் பால்ய நண்பனாக இருந்த காரணத்தினால், ஊருக்கு வரும் போதெல்லாம் எங்கள் வீட்டிற்கு வருவதுண்டு. அவரை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பேன்.

அவர் பேசுவதை உற்றுக் கேட்டு, 'சரியாக அந்த விதானையார் மாதிரியே பேசுகிறாரே" என்று வியந்து கொண்டிருப்பேன்.

நீண்ட காலத்துக்கு பிறகு, இதே மாதிரியான கேள்விகள் என்னிடமே கேட்கப் பட்ட போது

"என்னண்ணை சும்மா கதைக்கிற நேரமும் தணியாததாகம் சோமு மாதிரியே கதைக்கிறீங்கள்".

நான் நினைத்தது அப்போது ஞாபகத்திற்கு வரும்.

அந்த வானொலி நடிகர்தான். தற்போது உலகளாவிய அளவில் தமிழ் கலை பண்பாடு, நாடகம் போன்ற துறைகளில் பாண்டித்யம் பெற்றவராக, இலக்கிய சர்ச்சைகள் எழும் வேளைகளில் இறுதி அபிப்பிராயம் கூறும் தகுதி படைத்தவராக விளங்கும் பேராசியர் கார்த்திகேசு சிவத்தம்பி என்பது உங்களுக்கு இந்தளவில் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்தவரான கே.மார்க்கண்டனின் தந்தையார், தனது மகனின் நடிப்பை கேட்டு ரசிப்பதற்காகவே எங்கள் வீட்டிற்கு வருவார். தனது மகனை பாராட்டி யாராவது ஒரு வார்த்தை சொல்ல மாட்டார்களா என்ற எதிர்பார்ப்புடன் அவர் இருப்பார்.


யாரும் வாயே திறக்கமாட்டார்கள். இருந்து பார்த்து விட்டு, 'என்னுடைய மகன் மாதிரி நடிக்க இலங்கையில யார் இருக்கினம்" தனக்குத் தானே சொல்லிக் கொண்டு சென்று விடுவார். அவரது ஆதங்கம் எனக்கு இப்போது புரிகிறது.

கே.மார்க்கண்டன் ஒரு அற்புதமான வானொலி நடிகர் என்பதில் எனக்கு பூரண உடன்பாடு உண்டு.

இவ்வாறு இந்த இரு கலைஞர்களின் பாதிப்பு ஒரு பக்கமிருக்க, எனது அப்பாவின் இயற்கையான நகைச்சுவை உணர்வும், கலை ஆர்வமும் என்னை கலைப்பாதையில் செல்ல தூண்டிய காரணிகளாயின.

தென்னிந்தியப் பத்திரிகையான குங்குமம் ஆண்டு மலருக்காக என்னை பேட்டி கண்டு, எனது கலைவாழ்வின் தொடக்கத்தைப் பற்றி கேட்ட பொழுது இதையே பதிலாக சொன்னேன்.

கல்லூரி காலத்திலும், வெளியிலும் இரண்டொரு மேடை நாடகங்களில் நடித்து விட்டு, 1966ல் கொழும்பில் வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்து, புகையிரதம் ஏறியபோது வானொலிக் கனவுகளும் கூடவே என்னுடன் வந்தன.

கொழும்பில் வேலை ஏற்ற பின்னர் நான் செய்த முதலாவது காரியம் எனது ஆதர்ஸ புருசர்கள் இருவரையும் தேடிப் புறப்பட்டதுதான். மார்க்கண்டனை சந்திக்க முடியவில்லை.

சிவத்தம்பியை வெள்ளவத்தை-யில் அவரது அறையில் சந்தித்து வானொலி நடிகனாக வர சிபார்சு ஏதாவது செய்ய முடியுமா என்று கேட்டதாக ஞாபகம். அவர் சொன்ன பதில் அப்போது ஏமாற்றத்தை தந்தாலும் மிகச் சரியான-தென பின்னர் உணர்ந்தேன்.

'எனது சிபார்சு உனக்கு சில வேளைகளில் பாதகமாகவும் அமையலாம். நீயே நேரடியாக வானொலி நிலையத்திற்கு விண்ணப்பம் அனுப்பி, உனது முயற்சியினால், திறமையினால் நல்ல நடிகன் என்பதை நிரூபிக்க வேண்டும். அதன் பின்னர் யாராலும் உனக்கு தடை போட முடியாது.'

பல ஆண்டுகளுக்கு பின்னர், ஒரு சந்தர்ப்பத்தில், இலங்கை ஒலி-பரப்புக் கூட்டுத்தாபனத்தின் வெள்ளிவிழா என்று நினைக்கிறேன். சிறப்பு நிகழ்ச்சிகள் பல ஒலிப்பதிவு செய்தார்கள்.

காலம் சென்ற பேராசிரியர் கணபதிப்பிள்ளை எழுதிய வடம-ராட்சிப் பேச்சு வழக்கில் அமைந்த 'உடையார் மிடுக்கு' என்ற நாடகம் அதில் அன்று அந்த நாடகத்தில் என்னுடன் கூட நடித்தவர்கள் யார் என்று நினைக்கிறீர்கள்?



பேராசிரியர் கா.சிவத்தம்பி (மிக நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு இவர் நடித்த முதல் வானொலி நாடகம். இதற்கு பிறகு நடிக்கவில்லை என்று நினைக்றேன்) கே.மார்க்கண்டன், கூட நடித்த மற்றக் கலைஞர்.

பேராசிரியர் பழையதை நினைவுப்படுத்தி, “பாலா உன்னுடைய திறமை உனக்கு மற்ற-வர்களின் அங்கீகாரத்-தைப் பெற்றுத் தந்துள்ளதைப் பார்க்க சந்தோசமாக இருக்கிறது” என்று சொன்னார்.

இந்நேரத்தில் எனது கலைப்பாதையில் அவ்வப்போது பலர் காட்டிய அக்கறை எனது வளர்ச்சிக்கு காரணமாக இலங்கை வானொலியில் செய்-திகள் வாசிப்பவராக இருந்த எஸ். நடராஜ ஐயர், கலைஞர் எஸ்.எஸ். கணேசபிள்ளை, கலைஞர்.ரி. ராஜேஸ்வரன் ஆகியோர் அப்-போது இறைவரித் திணைக்களத்-தில் பணியாற்றிக் கொண்டிருந்தார்-கள்.

என் கலை வாழ்வின் முக்கிய திருப்-பங்களுக்கு காரணமாக இருந்தவை பற்றியும், இருந்தவர்கள் பற்றியும் இன்னும் பேச நிறைய இருக்கிறது.

தொடரும்

# ஆறை விட 5 பெரிது



மனிதனுடைய ஆறறிவு சாதிக்க முடியாததை ஐந்தறிவு சாதிக்கும் என்பது மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டுள்ளது. நிலநடுக்கத்தை முன்கூட்டியே கண்டறிந்து சொல்லும் திறமை பாம்புகளுக்கு இருப்பதாக சீன ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

நிலநடுக்கம் நிகழப் போகிறது என்பதை பாம்புகள் நிலநடுக்கம் நிகழப் போகும் இடத்திற்கு நூற்றிருபது கிலோ மீற்றர் தொலைவிலிருந்தே கண்டுபிடிக்குமாம். நிலநடுக்கம் நிகழப்போகும் நேரத்தில் அல்ல அனர்த்தம் நிகழப் போவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பே அதனை அறிந்து கொள்ளும் ஆற்றல் பாம்புகளுக்கு உண்டு என சீனாவின் நானீங் என்னுமிடத்தில் அமைந்துள்ள நிலநடுக்க ஆராய்ச்சிக் குழு கூறி வியக்க வைக்கிறது.

பாம்புகள் உலகிலுள்ள உயிரினங்களிலேயே அதிக உணர்வு கொண்ட இனம். நிலநடுக்கம் நிகழப் போவதை அறிந்தால் இவற்றின் செயல்பாடுகள் பெருமளவுக்கு மாறிவிடுகின்றன. கூண்டுகளில் அடைக்கப்பட்டிருந்தால் எப்படியேனும் வெளியேற வேண்டுமென்று வன்முறையாய் போராடுகின்றன. தங்கள் இடத்தை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடத்துக்குச் செல்ல முயல்கின்றன என்கிறார் இந்தக் குழுவின் இயக்குனராக உள்ள ஜியாங் வெய்ஷங். பாம்பு வளைகளில் காமராக்கள் பொருத்தி பாம்புகளின் நடவடிக்கைகளைக் கண்காணித்து நிலநடுக்கத்தை அறிந்து கொள்வதில் சீன விஞ்ஞானிகள் வல்லவர்களாகி வருகிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்சமுள்ள ஆச்சிக்கு





சோக்கெல்லோ சண்முகம்

பட்சமுள்ள ஆச்சி அறிவது,

ஏன் காயிதம் கனகாலமாய் போட இல்லையெண்டு எழுதியிருக்கிறாய். இங்குள்ள நிலமையள் உனக்கு இன்னும் சரியாய் விளங்கேல்லையெண்டது நல்லாய்த் தெரியுது. ஆச்சி! மனுசர் வெளிக்கிட்டு உலாவேலாது. சும்மா இருப்பம் எண்டாலும் பஸ் போட்டுக் கொண்டு திரியிறாங்கள். கொழும்போட தொடர்புகள் இப்ப பெரிசாய் இல்லை பிறகென்னண்டு காயிதம் வரும் .

போன முறை ஆடி அமாவாசைக்கு கீரிமலைக்கு போனனான். அடையாள அட்டையளை எல்லாரிட்டயும் வாங்கிக் கொண்டு உயர் பாதுகாப்பு வலயத்துக்க இருக்கிற கீரிமலைக்கு என்னை விட்டவை.

கீரிமலைக் கேணி நான் அண்டைக்கி 6, 7 வருசத்துக்கு முந்திப் பார்த்தது போலத்தான் இண்டைக்கும் இருக்கு. மனுசரிலை இருக்கிற மாற்றத்தை கேணியில காணேல்லை.

நான் அஞ்சு வயசிலை கீரிமலை ஆடி அமாவாசைக்கிப் போய் சனத்துக்குள்ள துலைஞ்சதும், பிறகு கற்பூரம் விக்கிற கபூர் நானா கூப்பிட்டு தனக்குப் பக்கத்தில வச்சிருந்ததும், அவர் அதிலயிருந்து என்ர ஆக்கள் வந்தால் என்னைக் கூப்பிடச் சொன்னதும், பிறகு அண்ணர் வந்து, கபூர் நானாவுக்கு நன்றி கூடச் சொல்லாமல் என்னைக் குறகுற வெண்டு இழுத்துக் கொண்டு வந்ததும், இண்டைக்கும் எனக்கு நல்லா நினைவிலயிருக்கு. அண்ணருக்கும் சின்ன வயசு, அதிலை அவருக்கு நன்றி சொல்லத் தெரியேல்ல எண்டு நினைக்கிறன். கபூர் நானாதான் ஏதோ குற்றம் செய்து விட்டவரைப் போல் எங்களைப் பரிதாபமாப் பாத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சி உனக்கொரு பகிடிக் கதை சொல்லட்டே, ஒரு நாள் கேணிக்குள்ள ஒருத்தரும் இல்லாத நேரத்தில படிக்கட்டிலையிருந்து கேணிக்க கல்லெறிஞ்சு விளையாடிக்கொண்டிருந்த ஒரு சின்னப் பொடியன் தவறி தண்ணிக்க விழுந்து தத்தளிச்சுக் கொண்டிருந்தான். கன பெண்டுகளும் குழந்தைகளும் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிண்டினம். ஒருத்தரும் கேணிக்குள்ளை இறங்கிப் பிள்ளையை காப்பாத்த முயற்சி செய்யேல்லை. ஒரு நல்ல பழுத்த கிழவன் கேணிக்குள்ளை குதிச்சு பொடியனை கரைக்கு கொண்டு வந்தார். எல்லோரும் அவருக்கு பாராட்டு தெரிவிச்சினம். அந்த கிழவர் கேட்டார். ஆரடா என்னைக் கேணிக்குள்ளை தள்ளி விட்டது என்று. பிறகு சொன்னார், இந்தச் சின்னப் பொடியன் என்னைக் கரைக்குத் தள்ளிக் கொண்டு வந்து விட்டதால தப்பினன் இல்லாட்டா கேணிக்குள்ளையே செத்திருப்பன் எண்டு கவலைப் பட்டார். உண்மையில சிலருக்கு சிலர் தேவையில்லாமல் பாராட்டுகினம் போலக் கிடக்கு.

ஆச்சி உனக்கு சொன்னால் என்னணை? எனக்கு கீரிமலையை விட கூவில் கள்ளை கூவில்தான் கூட நினைவிருக்கு. ஆரை மறந்தாலும் ஆச்சி, கூவில் கள்ளை மறக்க முடியுமே. ஆண் பனை கொடியேறினதும் கூட்டம் கூட்டமாய் கொழும்பிலையிருந்து யாழ்பாணம் வந்து சேருகிற கொர்ணமேந்து உத்தியோகத்தரை தெரியும்தானே. நவக்கிரி மாம்பழத்தையும், தாவடி போயிலையையும், நீர்வேலி வாழைக்குலையையும்.. மாவிட்டபுரம் வெத்திலையையும், கீரிமலை பனங்கட்டியையும் நாங்கள் மறக்கலாமே, சின்னச்சின்ன பனங்கட்டி குட்டானும், மூடல் பெட்டிக்குள்ள மணிலாசும், சிந்தா மணிக்கடலையும் தேவாமிர்தம் போல எல்லேன இருக்கும்.

ஆச்சி இப்ப பழய யாழ்ப்பாணம் இல்லயண, நீ எப்பிடியோ தப்பிப்போய் குசாலாய் மூத்த மகளோட ரொறொண்டோவில நிக்கிறாய். நாங்கள் இஞ்சை பாடாய் படுகிறம். ஒரு நாளைக்கு ஒரு இடம் இண்டைக்கு ஒரு ஊர், நாளைக்கு ஒரு ஊர். பக்கத்து வீட்டிலை இருக்கிறது எந்த ஊர்க்காரனெண்டு தெரியாது.

கீரிமலைக்கு தீர்த்தம் ஆடப்போன ஒருவர் அங்க ஒரு கழுதை கட்டி இருக்கிறதக் கண்டிருக்கிறார். கழுதையில ஒரு முடிய பிடுங்கித் தலையில் வைத்துத் தீர்த்தமாடினார். போனவையெல்லாம் அந்த மாதிரியே செய்ய கழுதை கடசியில செத்து போச்சுது. ஏனெண்டு மாறிமாறிக் கேக்க அவர் செய்தார் அதன் படி நாங்கள் செய்தம் எண்டு சொல்லீச்சினம்.. கடசியாக தொடக்கத்தில வைச்சவரைக் கண்டு பிடிச்சு ஏன் இப்படி செய்தாய் எண்டு கேட்க அவர் சொன்னார் நான் பகிடிக்கு செய்தனான் எண்டு. சாய்ஞ்சால்

சாயிற பக்கம் சாயிற செம்மறி ஆடுகள்! எண்டு முந்தி நீ அடிக்கடி ஒரு பாட்டுப் பாடுவாய் நினைவிருக்கே!!

ஆச்சி உன்ரை ஆக்கள் சமத்துவம் கேட்கிறது உனக்கு தெரியும். உலகம் முழுக்க உந்தச் சமத்துவம் குடுக்கப்பட்டிருக்கு என்டுறாங்கள். கனடாவில இன்னும் கூட எண்டு நினைக்கிறன். ஆனால் எணை எங்கள்ரை கீரிமலை கேணி அண்டைக்கும் சரி இண்டைக்கும் சரி இந்த சமத்துவத்துக்கு எதிர், இஞ்ச அவைக்கு புறம்பாக அடக்கமாக சிறுவர் கட்டிண தனிக்கேணி, விளங்குதெல்லே.

அந்திரட்டி மடம் உனக்கு நினைவிருக்கே? நீ இனி இஞ்சையே வரப் போறாய். அதுக்குப் போறதுக்குக் கூட காட் குடுத்து துண்டெடுத்துத்தான் போக வேணும். எங்களுக்கு அந்தக் காலத்தில கோயிலும் கீரிமலதான் அந்திரட்டியும் கீரிமலைதான், பிக்னிக் பறைடசும் கீரிமலைதான். எப்பிடி என்ற இங்கிலீசு.

ஆச்சி கீரிமலை அலுவல்கள முடிச்சுக்கொண்டு சிந்தாமணிக் கடலையும், மணிலாக்கொட்டைக் கடலையும், மூடல் பெட்டிக்க கட்டிக்கொண்டு அப்பிடியே கூவிலுக்கும் போட்டு சயிக்கிள்ளை ஏறிக் குந்தினால் கீரிமலை இறக்கத்தில கூவிக்கொண்டு சயிக்கிள் மாவிட்டப்புரம் முடக்கில வந்து ஏறும்.இப்ப விண் கூவிக்கொண்டு சயிக்கிள் இராது, கிடக்கட்டும். அப்ப ஏறினாலும் விண்கூவும்,ஆனா அது சயிக்கிளா இராது, கிடக்கட்டும். அப்ப மாருதப்பூர்வீக வள்ளி வரேக்க கந்தசாமியாற்ர கோயில் கெம்பீரமா நிக்கும். மாருதப்பூர்வீக வள்ளி நேத்திக் கடனுக்குக் கட்டின கோயில் அதையும் கும்பிட்டுட்டு திரும்பி சயிக்கிள்ள ஏறினால் சுன்னாகத்துல வந்து மிதக்கும்.

ஆச்சி.. கீரிமலைக்கு பக்கத்தில காங்கேசன்துறை எண்டது உனக்குத் தெரியும்தானே? கோவிக்காதை அண்டைக்கு உன்ரை ஊரில இருந்து வந்த பிள்ளை ஒண்டு நான் கோண்டாவில் எண்டு சொல்ல, அது மிருகமா அங்கிள் எண்டு கேட்குது. அதுதான் நீயும் ஆக்களை மறந்த மாதிரி ஊர்களையும் மறந்திருப்பாய் எண்டு நினைச்சன். ஆச்சி அந்த காங்கேசன் துறையிலதான் மாவிட்டபுரம் கோயிலுக்கு சலதுகள் வந்தூதாம் அதுதான் காங்கேசன் துறையாம். காங்கேசன் எண்டாலும் முருகனாம்.

சுன்னாகத்தில கொஞ்சம் ஆறி சந்தைக்குள்ள நுழைஞ்சு முளைக் கீரையும் ஏழாலை மரவள்ளிக் கிழங்கும் சாவகச்சேரி குத்தரிசியும் வாங்கிக் கொண்டு போய் மனிசியின்ரை கையிலை கொடுத்து சமைச்சு சாப்பிட்ட நினைப்பெல்லாம் இப்பவும் என்னட்டை இருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சி நாங்கள் எதை மறந்தாலும் மக்களையும் மண்ணையும் மறக்கக் கூடாது. எங்களின்ரை ஊருக்கு ஒவ்வொரு பெருமை உண்டு. ஒரு நாள் மல்லாகத்தில ஒரு இளைஞர் கூட்டம் விழாங்காய்க்கு கல் எறிஞ்சு கொண்டிருந்தவை. அவை களைச்சுப் போய் நிண்ட நேரத்துல நான் போனன். தூரத்திலேயே அவர்கள் கதைச்சது எனக்கு கேட்டுது. ஏழாலையான் வாறான். தடியக் குடு எறியட்டும் எண்டதும் காதில கேட்டது. நான் தடிய வாங்கி ஒரே எறி குலை குலையாய் பத்துப் பன்னிரண்டு விழுந்துது. அவைக்குப் பெரிய ஆச்சரியமாப் போச்சு. எனக்கும் பெருமை. கொக்கறைப் பனை மட்டை எறிஞ்சு எத்தினையை விழுத்தின அனுபவம் எனக்கு.

ஆச்சி.. உனக்கு தெரியாத ஒரு புதினத்த இப்ப உனக்கு நான் சொல்லப் போறன். இப்ப, இங்க இருக்கிற இதரை வாழைப்பழம் முந்தி இருந்த பழத்தின்ர அளவு இல்லை. நல்ல மொத்தம். மொந்தன் வாழைப்பழத்தின்ர அளவு. நாடு நல்லாய் செழிச்சிருக்கெண்டு நம்பிப் போடாத. ஒரு அளவில வாழைப் பொத்திய முறிச்சுப் போட்டு யூரியா கட்டி விட்டால் சரி. இதரை மொந்தனாகும். காய்கறிகளுக்கெல்லாம் மருந்தடிக்கினம். கீரைக்கும் மருந்தடிக்கினம், மருந்தடிக்காத காய்கறியள் சாப்பிடோணும் எண்டு டாக்குத்தர் சொன்னவர். முருங்கையிலை மட்டும்தான் சாப்பிடலாம். அதுக்குத்தான் மருந்தடிக்கிறது இல்லப் போல கிடக்கு.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் எண்டு வள்ளுவர் பிழையாய்ச் சொன்னதுல இதுவும் ஒண்டு.

உனக்கெழுத கனக்கக் கிடக்கு, ஆச்சி எல்லாம் பிறகு எழுதுறன். இப்படிக்கு, உன்ர பட்சமுள்ள சண்ணுவத்தார்.




**டீ.வி.யில் என்னத்த அப்படி அதிசயமா பார்த்துக் கொண்டிருக்கிறாய்?**

**குழப்பம் பண்ணாதீங்க! சுடுதண்ணி வைக்கிறது எப்படியெண்டு விளக்கமா சொல்லிக்கொண்டிருக்றா அந்த அம்மா.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு பொக்கிஷம் மூடிக் கிடக்கிறது

வத்திக்கானில் ஆராய்ச்சியாளர்களின் பொக்கிஷமாக இருந்து வந்த அறுநூறு ஆண்டுகள் பழமையான நூலகம் ஒன்று மூன்று ஆண்டுகளுக்கு மூடப்படுகிறது. இந்தத் தகவல் உலகெங்கும் உள்ள ஆரய்ச்சியாளர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. புனித நிக்கோலஸ் என்பவரால் அறுநூறு ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட இந்த நூலகத்தில் பத்து இலட்சத்திற்கும் அதிகமான அபூர்வமான நூல்கள் இருக்கின்றன. இந்த நூலகத்தின் மிக முக்கியமான சிறப்பம்சம் இங்கே இருக்கின்ற எழுபத்தைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட கையெழுத்துப் பிரதிகள் எனலாம். இது ஆராய்ச்சியாளர்களின் பொக்கிஷமாக இருந்து வருகிறது.



குளிர்சாதன வசதி, தூசு தடுப்பு நடவடிக்கைகள், நல்ல காற்றோட்டம் என இன்னும் வசதிகளை மேம்படுத்துவதற்காகத்தான் இந்த மூடுதல் என்று நிர்வாகம் சொன்னாலும், அதை முன்கூட்டியே தெரிவிக்காததால் ஆராய்ச்சியாளர்களுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இங்கிலாந்து அரசர் எட்டாம் ஹென்றி ஆன் பொலினுக்கு எழுதிய சரித்திரப் புகழ்வாய்ந்த காதல் கடிதங்களும் இந்த நூலகத்தில் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. எட்டாம் ஹென்றியின் காதல் திருமணமாவதை போப் நிராகரித்ததும், அதனால் ஏற்பட்ட விளைவுகளும் இங்கிலாந்து வரலாற்றிலும், அரசியல் வரலாற்றிலும் நீங்கா இடம் பிடித்த கதை என்பது மறுக்கப்பட முடியாதது.



# வலி தருகின்ற வலி

**ஈழத்** தமிழ் அகதிகளின் சோகங்களை முன்வைத்து வெளிவந்திருக்கிறது கவிஞர் அறிவுமதியின் 'வலி' கவிதைத் தொகுப்பு. இந்த நூலை நம் கையில் வாங்கும் போது ரத்தம் சொட்டுகின்ற ஒரு ஈரக்குலை துடிப்பது போலுள்ளது. மீனை அரியும் போது கிடைத்தது குழந்தையின் கண் என்கிற முதல் கவிதையே நம் நெஞ்சை உலுக்குகிறது. இந்தக் கவிதையின் அதிர்வுகள் இரண்டாயிரம் ஆண்டுகள் முன்னே போய் புறநானூற்றுப் பாடல் காட்சியில் முட்டுகிறது.

'தண்புனல் பரந்த மணமறுத்து மீனின் செறுக்கும்' - இந்த வரிகள் கருங்கழல் ஆதனார் என்ற புலவரால் பாடப்பட்டுள்ளது. சோழன் கரிகால் பெருவளத்தான் நாட்டுச் செழிப்பைச் சொல்வது. வாய்க்காலில் ஓடிவருகிற தண்ணீர் உடைந்துவிடுகிறது. ஒரு கை மண்ணள்ளி அடைக்கிறது. அள்ளினால் மண் வரவில்லை மீன்கள் வருகின்றன. மீன்கள் உடைப்பை அடைக்கின்றன. இன்று கண் வருகிறது. ஈழத் தமிழர்களின் வாழ்வு அவலத்தின் விளிம்பில் நிற்கிறது. நாம் வெட்கமில்லாமல் வேடிக்கை பார்க்கிறோம்.



படகில் ஏறினோம்
படகுகளை விற்று
இங்கே வீடு கிடைப்பதற்குள்
அங்கே நாடு கிடைத்துவிடும்.

இராமேசு வரத்தில்
எல்லோரும் குளித்துக் கரையேறுகிறார்கள்
நாங்கள் குதித்துக் கரையேறுகிறோம்.

இந்தக் கவிதை வரிகளெல்லாம் தமிழ் நெஞ்சங்களில் கனுக்கனுவாய் தெறிக்கின்றன. தாய்த்தமிழகம் தங்கள் சகோதரர்களை வரவேற்கும் லட்சணம் தெரிகிறது. வாடகைக்கு வீடு கேட்டதற்கு வீடு தராவிட்டாலும் பரவாயில்லை, காவல் துறையைக் கூட்டி வந்து காட்டிக் கொடுக்கிற நவீனத் தமிழர்களின் முகத்தில் இக்கவிதை அறைகிறது. இங்கு அகதியாக வந்தவர்கள் படுகின்ற அவதிகளை இந்த நூல் முழுவதும் வேதனை பொங்க பதிவு செய்கிறார் அறிவுமதி. மேலும் வெறும் ஊமைச் சாட்சியாக- கையறு நிலையாக இந்தக் கவிதைகள் முடியும் போது, சொந்த நாட்டில் - சொந்த வீட்டில் நாமும் அகதிகளாக ஆக்கப்பட்டோமோ என்றும் தோன்றுகிறது.

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் அங்கு நடக்கின்ற கர்ண கொடூரங்களைப் பல கவிதைகள் பேசுகின்றன. உடல் முழுவதும் வெட்டுக்காயங்களுடைய ஒரு மழலையின் புகைப்படத்திற்கு அருகே..



பச்சிளங்குழந்தையை
உடல் நெடுக
இப்படி உளியால் கொத்தியிருக்கிறார்களே
புத்தர் சிலைக்கு
முயற்சி செய்திருப்பார்களா

என்று கேட்கும் அறிவுமதி,

சாலைபோடும் பெரு வண்டியைப் பார்த்ததும்
பதறிப்போய் பதுங்குகின்றன
விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள்

என்று அகதி முகாமில் தான் கண்ட நேரடி அனுபவத்தை எழுதும்போது என்ன நடந்திருக்கும் என்பதை நம்மால் யூகிக்க முடிகிறது. குழந்தைக்கு ரோடுரோலரும் பீரங்கி போல்தான் தெரிகிறது. இந்த இடத்தில் செஞ்சோலைச் சோகத்தைப் பற்றி கவிஞர் பச்சியப்பன் எழுதிய

'வேட்டையாடப் படுவோம்
என்று தெரியாமலே
விளையாடிக் கொண்டிருக்கிறது
எனது குழந்தையும்



என்ற வரிகள் நினைவுக்கு வருகின்றன.

பொதுவாக ஒரு படைப்பாளி தன்னனுபவத்தில் தனக்கு நேர்ந்த வலியை முன்வைத்து எழுதும் போது கூசாமல் 'சுயபரிதாபம்' என்று சொல்லக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியவர்கள் ஒரு இனத்தின் வேதனையை முன்வைத்து எழுதும் போது அப்படிச் சொல்லித் தப்பி விடமுடியாது.மருந்து பற்றி படித்து கொண்டிருக்கையில் விழுந்தது மரணம். ஆழிப் பேரலைகளும் எங்கள் பெண்களை வீடு புகுந்து இழுத்துப்போய் கொல்லத்தான் செய்தன ஆனாலும்.... என்றுகேட்கும் அறிவுமதியின் கேள்விக்கு பதில் யாரிடமிருக்கிறது? இந்த மாதிரியான கவிதைகளில் கவிச்சுவை தேடித் திரிவதே ஒரு அபத்தமான விஷயம்.

வாளில் அழகைப் பார்க்காதே
கூர்மையைப் பார்

என்ற காசி ஆனந்தனின் கவிதையைப் போலத்தான், அறிவுமதியின் இந்தக் கவிதைத் தொகுப்பும்.

முகாமிற்கு அருகில் உள்ள பள்ளியிலிருந்து கேட்கிறது யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றொரு கவிதைக் குரல் ஒலிக்கிறது. இந்நூலில் உண்மையில் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற வரிகளை பன்னாட்டுக் கம்பெனிகள் தான் தமிழனை விடச் சரியாகப் புரிந்து கொண்டுள்ளன போலும். இந்தியாவில் தமிழகத்தின் எந்தக் கிராமத்தில் போய்ப் பார்த்தாலும் விவசாயின் சவ ஊர்வலம் ஒன்று முக்குத் திருப்பிக் கொண்டிருக்கும் இந்தச் சூழலில், சிறப்புப் பொருளாதார மண்டலம் விதைக் கொட்டையைத் தவிர வேறு எல்லா விதைகளையும் பறித்தும் தமிழ் தேசியர்கள் தங்கள் குரலை ஓங்கி ஒலிக்க வேண்டுமென்ற அறிவுமதியின் இந்த நூலை முன்வைத்து நாம் கேட்டுக் கொள்ள முடியும்.

தோழர் இரா.நல்லக்கண்ணு, பிஜித் தீவில் - கரும்புத் தோட்டத்தில் தமிழ்ப் பெண்கள் பட்ட துயரத்தைப் பாடிய பாரதியின் பாடலோடு அறிவுமதியின் இந்த கவித் தொகுப்பை ஒப்பிட்டு வழங்கியுள்ள நெகிழ்வுரையோடும், ' நாட்டுக்காக உயிரை விடுவது உத்தமம். ஆனால் அந்த உயிரை விடுவதற்கும் ஒரு நாடு வேண்டுமல்லவா? என்கிற இயக்குநர் சீமானின் உயிருரையோடும் எங்கள் தாய்க் கவிஞனின் வலியைப் பிரதிபலிக்கும் முகமாக அமைந்துள்ளது இந்நூல். ஈழத் தமிழ் அகதிகள் முகாமை நோக்கி நம் கவனத்தைக் குவிக்கிறது.







# ஆசிரியர்களின் ஆசிரியர்

கணக்கும் தமிழும் அக்காவின் பிள்ளையளுக்கு சொல்லி கொடுக்க வந்தார் அவர். யாழ்ப்பாணத்தின் பிரசித்தமான கல்லூரியிலை பிரசித்தமானவராம் அவர். அவரைக் கண்டால் வாங்குகளும் மேசைகளுமே கைகட்டி நிற்குமாம். அவரின்ரை வீட்டிலை ஒரு mini libraryயே இருக்குதாம். அக்கா சொல்லுவா. அக்கா கதைகதையாய்ச் சொல்லுவா. He is the teacher of teacher எண்டு அக்காவின்ரை தவ்வல்களும் அவருக்கு முன்னாலேயே ஒருநாள் சொன்னதை நான் கேட்டன்.

நானும் சொல்லப் போறன். ஆனா இது கதையல்ல. கதையா இருந்தால் நான் இதைச் சொல்ல மாட்டன். இப்படியான கதையளை சொல்லத் தானே ஆவெண்ட விக்கல்களும், தாமரைகளும் உள்ளன.

Holiday இல் வீட்டிலை சும்மா இருந்தன். கொஞ்ச நாள். அவரிடம் மேற்குறிப்பிட்ட வாத்தியாரிடம் கொஞ்ச story books கேட்டன். My pleasure எண்டு இங்கிலீஸ் ரமணிச்சந்திரன்ரை நாவல் சில கொண்டு வந்த தந்தார். தான் ஒண்டும் வாசிப்பதில்லை என்று அவருக்கு அக்கா சொல்லி வைத்தாள். அதை ஏன் சொல்ல வேணும் அக்கா? அக்கா எப்பவுமே இப்படித்தான். பெருமைப்பட முடியாத விடயங்களைக் கூட பெருமை போல சொல்லுவாள். அவரிலை எனக்கும் நிறைய மதிப்பு. பின்னேரத்திலை அக்கா வெளியிலை போயிடுவா கடையளுக்கு. அக்கா தனது கணவனைப் பிரிஞ்சு வாழுறா. (அது ஒரு தனிக்கதை). அவர் tution கொடுக்க வரும்போது நான் மட்டும் தான் பிள்ளை.

எனக்கும் அவரிலை இருந்தது நிறைய மரியாதை. அவர் வந்தா tea போட்டுக் கொடுப்பன். ரமணிச்சந்திரன்ரை கதையிலை வாற பெண் பற்றி கேட்பார் கனக்க. ரமணிச்சந்திரன்ரை கதை கேட்க அன்புடன் கொண்டு வந்தார்.தலைப்பு : காமமும் யோகாவும். தலைப்பை கவனிக்காமல் அதை கொண்டு வந்திட்டார் எண்டு தான் நான் முதல்லை நினைச்சனான். அடுத்த நாள் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏதேனும் அதிலை விளங்காட்டால் வெட்கப்படாமல் என்னைக் கேளும்"

அவரும் அவர் தந்த புத்தகத்தின்ரை தலைப்பும். அவரின்ரை தலைப்பையே நான் வெட்டியிருக்க வேணும். அதுக்குப் பிறகு தேவையில்லாமல் கிட்ட வருவார் என் தலையை கோதுவார்.

அதுக்கு பிறகு விருப்பம் இல்லாத படிப்பித்தல் தொழிலை நான் கைக்கொண்டன். வீணா ஏன் அவருக்கு மாசம் மாசம் 150 டொலர் கொடுப்பான். நானே இனி சொல்லி கொடுக்கிறன் என்றேன். அக்காவுக்கு பேருவகை. 150 டொலரை எப்படி எப்படி எல்லாம் செலவழிக்கலாம் எண்டு அவவுக்குத்தான் தெரியும்.

இப்ப எனக்கு teacher மாரை பிடிக்கிறேல்லை. ஓ கடைசி நாள் நான் உலகத்தில் உள்ள எல்லா வெறுப்பும் ஒன்று சேர அவருக்கு காறி துப்பினனான். அக்காவுக்கும் நான் நடந்ததை சொல்லேல்லை. அக்கா சொல்லுவா நான் தான் அவரை பிழையா விளங்கி போட்டன் எண்டு. அவர் என்னை தன்ரை பிள்ளை போல எண்ணித்தான் behave பண்ணுறவர் என்று.

அக்கா எப்பவுமே இப்படித்தான். பெருமைப்பட முடியாத விடயங்களைக்கூட பெருமை போல சொல்லுவாள்

-வெளிநாட்டில் இருந்து பச்சைக்கிளி சொன்னது



"நண்பா, ஒலிம்பிக்ல இலங்கை சாதிக்காததை நீ சாதிச்சுட்டே
அதெப்படி?
பின்னே, உன் மாமனாரை ஏமாத்தி இதுவரை முப்பத்தஞ்சு பவுன் தங்கம் வாங்கியிருக்கியே!"




இதென்ன உங்கட வயித்தில கரண்டிகள் கிடக்கு!!
நீங்கள்தானே மருந்து குடிக் கேக்க இரண்டு கரண்டி சாப்பிடச் சொன்னீங்கள்.



# இரண்டு கேள்விகள்

## கேள்வி 1

உங்களுக்குத் தெரிந்த பெண் ஒருத்தி கர்ப்பமுற்ற நிலையில் இருக்கிறாள். ஏற்கனவே எட்டுக் குழந்தைகளைப் பெற்ற அவள் இப்போது ஒன்பதாவது தடவையாக மற்றொரு கருவைச் சுமக்கிறாள். ஏற்கனவே அவள் பெற்ற எட்டுக் குழந்தைகளில் மூன்று குழந்தைகள் செவிடு, இரண்டு குழந்தைகளுக்கு கண்பார்வை கிடையாது, மற்றொரு குழந்தையோ மன வளர்ச்சி குன்றியது. கர்ப்பமுற்றிருக்கிற பெண்கூட பக்கவாத நோயின் தாக்கத்தால் இருக்கிறாள். இத்தனை பிரச்சனைகள் உடைய இந்தப் பெண்ணின் கர்ப்பத்தை நீங்கள் கலைக்கச் சொல்வீர்களா?
இதன் பதிலை மனதில் இருத்தியபடி அடுத்த கேள்விக்கு வாருங்கள்

## கேள்வி 2

ஒரு உலகத் தலைவரை தேர்வு செய்வதற்கான வாய்ப்பு இது!! உங்கள் வாக்குகளில் மட்டுமே இந்த தேர்வு சாத்தியமாகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். மூன்று வேட்பாளர்கள் இதற்கு போட்டியிடுகிறார்கள் போட்டியிடும் அபேட்சகர்கள் பற்றி தரப்படும் குறிப்புகளை வைத்து சரியான ஒருவரை தெரிவு செய்யுங்கள்.

**முதலாவது வேட்பாளர்**

ஊழல் நிறைந்த அரசியல் வாதிகளோடு கூட்டு வைத்திருப்பவர். எப்போதும் சோதிடர்களை நம்புகிறவர். இவருக்கு இரண்டு மனைவிமார், அதுமட்டுமல்ல மிக அதிகமாக புகைப்பவரும் குடிப்பவரும் கூட.

**இரண்டாம் வேட்பாளர்**

அதிகார பீடத்திலிருந்து இரண்டு தடவைகள் துரத்தியடிக்கப்பட்டவர். படித்த காலத்தில் ஓப்பியம் என்ற போதையில் இருக்கும் பழக்கம் உண்டு.

**மூன்றாம் வேட்பாளர்**

நாட்டுக்காக போர்க்களம் புகுந்து கௌரவம் பெற்ற வீரர். என்றுமே மாமிசம் உண்ணாதவர் அதுமட்டுமல்ல புகை பிடிப்பதோ மதுபானம் அருந்துவதோ கூட கிடையாது. எப்போதாவது கொஞ்சம் பியர் குடிப்பதுண்டு. எந்தப் பெண்ணையும் எப்போதும் இவர் ஏமாற்றியது கிடையாது.

விடைகள் பக்: 45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் இசையின் இழப்பு

– பிரவா –



**யாழ்ப்பாணத்து** நல்லூரில் காற்றை இனிப்பாக்கி இசை சேர்த்த, லயநாத நரம்பொன்று தமிழகத்தில் அறுந்தோய்ந்தது. இந்தச் செய்தி, இசையறிந்த உள்ளங்களை பலத்த துயரத்தில் ஆழ்த்தியிருக்கிறது. இன்றைய உலகில் செவியில் சுவையுணர்ந்தோர் நன்கறிந்த எல்.ஷங்கர், எல்.சுப்ரமணியத்தின் மூத்த சகோதரன் எல்.வைத்தியநாதனை நாம் இழந்து விட்டோம். யாழ்ப்பாணத்தில் பிறந்து, தமிழகத்தில் வாழ்ந்து , உலகை தன் இசையால் அளந்த எல்.வைத்தியநாதனை நம்மவரில் எத்தனை பேர் முழுமையாக அறிந்து வைத்திருக்கிறார்கள் என்ற கேள்வி எழுகிறது.

ஒரு காலகட்டத்தில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு துறைசார் வல்லுனர்கள் பலர் தொழிலுக்காகவும், வாழ்வுக்காகவும் வந்தனர். சமஸ்கிருதம் போதிக்க வந்த சீதா ராமசாஸ்திரிகள், ராமசாமி சர்மா ஆகியோர். ஆரம்பகால வீரகேசரியின் ஆசிரியர் ஹரன் உள்ளிட்ட பத்திரிகையாளர்கள், டாக்டர் கோவூர் உள்ளிட்ட அறிவியலாளர்கள், இலங்கை வானொலியின் இசைத்துறையை தலைமையேற்ற சங்கீத விற்பன்னர் மணி பாகவதர் உள்ளிட்ட இசையாளர்கள் எனப் பலரை இங்கு நினைவு கூரலாம். இவர்களின் வரிசையில் இந்தியாவிலிருந்து ஈழத்திற்கு வந்த மற்றுமொரு இசை விற்பன்னரும் பிரபல வயலின் வித்துவானுமான லஷ்மி நாராயணாவின் மூத்த மகனாக யாழ்ப்பாணத்தில் 1942இல் பிறந்தவர் எல்.வைத்தியநாதன். வித்வான் லஷ்மி நாராயணா யாழ்ப்பாணக் கல்லூரியின் விரிவுரையாளராக அக்காலகட்டத்தில் பணியாற்றி வந்தார்.

லஷ்மி நாராயணா, சீதாலஷ்மி என்ற சங்கீதத் தம்பதிகளுக்கு மகனாக பிறந்த வைத்தியநாதனை அடுத்து பிருகந்நாயகி, சுப்பு லஷ்மி, சுப்ரமணியம், ஷங்கர் என உடன் பிறப்புக்கள் பிறந்தன. பெற்றோர் பின்னர் நுகேகொடவில் வாழ்ந்தபோது, வைத்தியநாதனின் இளமைப் படிப்பு நுகேகொட மகாவித்தியாலத்தில் அமைந்ததாகவும், அவரது சகோதரிகளான பிருகந்நாயகி, சுப்புலஷ்மி ஆகியோர் அன்றைய காலகட்டத்து இலங்கை வானொலியின் இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்றதாகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக இருந்து ஓய்வு



எல்.வைத்தியநாதன்
(1942–2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுத் தற்போது சிட்னியில் வாழ்ந்து வரும் திருமதி ஞானம் இரத்தினம் அவர்கள் தெரிவித்தார். இசையிழந்த இன்றைய வானொலி அன்று நடத்திய நாடு தழுவிய வெண்பாப் போட்டியில் 13இற்கும் 15 இற்கும் இடைப்பட்ட வயதுப் பிரிவில் எல்.வைத்தியநாதன் பங்கேற்றதையும் திருமதி ஞானம் இரத்தினம் சுட்டிக்காட்டினார். (அப்போட்டியில் வைத்தியநாதன் மட்டுமல்லாது அமரர் எஸ். கே.பரராஜசிங்கம், திருமதி குலபூஷணி கல்யாணராமன், லண்டனில் வாழும் திருமதி மாதினி சிறீஸ்கந்தராஜா ஆகியோரும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.)

எல். வைத்தியநாதனின் இளமைக்கால இசைவேர்கள் ஈழத்திலேயே பதியப்பட்டன. இசை வீரியத்தோடு புறப்பட்டு தமிழகத்தில் தன் இசைக்கொடியை நாட்டிய எல். வைத்தியநாதன் அங்கு ஆற்றிய இசைப் பணியைப் பாராட்டி 2003 ஆம் ஆண்டில் தமிழகஅரசு கலைமாமணி விருது வழங்கி அவரை கௌரவித்தது.

சகோதரர்களான எல். வைத்தியநாதன், எல்.சுப்ரமணியம், எல்.ஷங்கர் மூவரும் Music trio என்று போற்றிப் புகழும் அளவிற்கு வயலின் வாத்திய இசையின் உலக மேதைகளாக இருந்தார்கள். பல பொது மேடைகளில் தனித்தும் சகோதரர்களோடும் தன் இசைப்பணியாற்றி வந்த வைத்தியநாதன் பல இசைத் தொகுப்புப் பேழைகளையும் உருவாக்கி அளித்தவர்.

இசைத்துறையில் தன் தந்தை லஷ்மி நாராயணாவைக் குருவாகப் பெற்ற இவர், சினிமாத்துறையில் ஆரம்பத்தில் இசையமைப்பாளர் ஜி.கே. வெங்கடேஷின் உதவியாளராக இணைந்து செயற்பட்டார். இது தனித்த இசை ரசிகர்களைக் கடந்து திரையிசை ரசிகர்களையும் அவரது இசை சென்றடைய உதவியது. சினிமா இசையமைப்பாளராக 'வாழ்த்துக்கள்' என்ற திரைப்படம் அவரை அறிமுகம் செய்தது. ஒரு காலகட்டத்தில் இலங்கை வானொலி ரசிகர்களின் காதில் தேனாய் ஒலித்த "அருள் வடிவே" என்ற கே.ஜே.ஜேசுதாஸின் பாடல் இப்படத்திலேயே இடம் பெற்றது.

மகாகவி பாரதி பாடல்களை ஏ.வி.மெய்யப்ப செட்டியார் தேசிய-மயமாக்கிய பின்னர் பல திரையிசையமைப்பாளர்கள் அப்பாடல்களை கையாண்டனர். அவை எல்லாவற்றையும் தாண்டி உணர்வால் மேலெழுந்து இன்றுவரை தேனாகக் காதில் பாய்வது, எல்.வைத்தியநாதனின் இசையில் உருவான 'ஏழாவது மனிதன்' திரைப்படப் பாடல்கள்தான் என்று சொன்னால் பலரும் மறுதலிக்க மாட்டீர்கள் என்றே நினைக்கிறோம். பிரபல இந்திய எழுத்தாளர் ஆர்.கே நாராயணன் புனைவுக்கிராமம் ஒன்றை வைத்து எழுதிய 'மால்குடி டேய்ஸ்' என்ற புதினத்தைக் கன்னடத்தின் பிரபல இயக்குனர் சங்கர் நாக் இயக்கி தொடராக தூர்தர்ஷனில் ஒளிபரப்பினார், ஆர்.கே.நாராயணனின் அப்புனைவுக்கிராமத்தை தன் இசையால் மெருகூட்டிய பெருமையை எல்.வைத்தியநாதன் தனதாக்கிக் கொண்டார். சினிமாவில் எல். வைத்தியநாதனை அதிகம் அடையாளம் காட்டிய மற்றுமொரு திரைப்படம் சங்கீதம் சீனிவாசராவ் இயக்கத்தில் கமலஹாசன் நாயகனாகத் தோன்றிய 'பேசும் படம்', வசனங்கள் இல்லாத படமாகவும் இசைமட்டுமே ஒலிப்பொருளாகவும் அமைந்திருந்த திரைப்படம் அது. சினிமா உலகில் இயக்குனர் பாலுமகேந்திரா, இசையமைப்பாளர் இளையராஜா இல்லாமல் படங்களை இயக்க மாட்டார் என்பதற்கு விதிவிலக்காய் அமைந்த படங்களில் ஒன்று சலீல் சௌத்திரி இசையில் வந்த " அழியாத கோலங்கள்" மற்றையது எல்.வைத்தியநாதன் இசையில் வந்த "மறுபக்கம்" (தேசியவிருதுப் படம்) . யூகி சேதுவின் "கவிதை பாட நேரமில்லை" படத்தையும் சொல்லி வைக்கலாம்.

கி.ராஜநாராயணனின் நாவலில் உருவான 'ஒருத்தி', கே.என்.டி. சாஸ்திரியின் இயக்கத்தில் வெளிவந்து சிறந்த திரைப்படத்திற்கான தேசிய விருதைப் பெற்ற தெலுங்குத் திரைப்படமான "தில்லாடனம்", தேசிய திரைப்பட வளர்ச்சிக்கழகத்தின் தயாரிப்பில் ஹரிஹரன் இயக்கத்தில் வந்த "Current", கன்னடப் படவுலகின் தலை சிறந்த இயக்குனர் கிர்ஷ் காசர-வள்ளியின் இயக்கத்தில் வந்த 'Ek Ghar", கிரிஷின் இயக்கத்தில் வந்து இந்திய சினிமாவின் அதி உயர் விருதான தங்கத் தாமரை விருது பெற்ற "Tabarana Kathe" போன்ற பல புகழ் பூத்த இந்தியச் சினிமாக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்.வைத்தியநாதனின் இசை கலந்து உயிர் பெற்றன. ஈழத்துப் பாடல்களிலும் இசையமைப்பாளர் தேவேந்திரன் வரிசையில் தனது இசையால் உணர்வுகளைக் கலந்தவர் என்ற புகழும் எல்.வைத்திய-நாதனுக்கு உண்டு.

உணர்வுகளின் சுருக்கெழுத்தையே நாம் இசை என்கிறோம். அதைப் படைக்கவல்லவரை கடவுளரில் ஒருவராய்ப் பார்க்கிறோம். அத்தகையதோர் படைப்பாற்றல் மிக்க ஓர் இசைக் கடலான எல்.வைத்திய-நாதனின் அலைகள் கடந்த மே மாதம் 19ஆம் திகதி காலை தம் வீச்சுக்களை நிறுத்திக் கொண்டன. மொழிகளைத் தாண்டும் இசையாலும் முடியாத தூரத்தில் ஒரு இசையாளனின் பயணம் தொடர்கிறது. எம்மிடமிருந்து விடைபெற்றுப் பயணிக்கும் ஒரு கலைஞனுக்காய் எம் மண் பேசும் மௌனத்தால் நன்றி சொல்லிப் பணிகிறோம்.



## இரண்டு கேள்விகளுக்குமான விடைகள்

### இந்த மூன்று பேரில் யாரை தெரிவு செய்யப் போகிறீர்கள்?

நீங்கள் யாரைத் தெரிவு செய்தீர்கள் என்பதற்கு முன்னர் ஒரு விடயம். குறிப்புக்கள் தரப்பட்ட அந்த மூன்று பேரும் உலகப் போரின் நாயகர்கள். முதலாம் வேட்பாளர் பிராங்கிளின் டீ ரூஸ்வெல்ற், இரண்டாவது நபர் உலகப் போரின் பிரித்தானியப் பிரதமர் வின்சன்ற் சர்ச்சில். நீங்கள் மூன்றாவது நபரை தெரிவு செய்திருந்தால் அவர் வேறு யாருமல்ல சர்வாதிகாரி அடல்ப் ஹிட்லர்தான் அவர்.

### கருக் கலைப்பு

சரி இனி முதலாவது கேள்வியான கருக் கலைப்பு விடயத்திற்கு வரலாம், அந்தப் பெண் கருவை கலைக்க வேண்டும் என்று நீங்கள் கருதினால் உலகின் மாபெரும் இசைமேதை பீத்தோவனை நீங்கள் கொன்று விட்டீர்கள் என்று அர்த்தம்!!!!!

**சரியான தீர்வுகள் எல்லாச் சந்தப்பத்திலும் நியாயமானவை அல்ல!!**



# புதிய எலியும் பழைய பூனையும்

பல நாளாய்ப் பசியில் கிடந்தது ஒரு பூனை. அது இருந்த வீடு வறுமையின் எல்லையில் ஊசலாடிக் கொண்டிருந்தது. வழமையாக வளர்ப்புப் பூனைகளுக்குக் கிடைக்கும் அன்றாட உணவு வாய்ப்புக்கள் இந்தப் பூனைக்கு இல்லாமல் போய் பல நாட்களாகி விட்டன. இன்றோ நாளையோ உடைந்து விழுந்துவிடும் தறுவாயில் இருந்த அந்த வீட்டில், எல்லா வீடுகளிலும் இரவிரவாக உலாவித் திரியும் எலிகளும் குறைந்தே காணப்பட்டன. ஒவ்வொரு இரவும் தனது பசியைத் தீர்க்க அந்தப் பூனை படாத பாடு பட்டது. ஒரு நாள் அதிர்ஷ்டவசமாக ஓர் எலி இதன் கண்களில் பட்டது. கண்ணில் கண்ட எலியைப் பிடிப்பதற்காக தன் இயலாமையை மறந்து தன் வயிற்றை நினைத்தபடி விரைந்து ஓடியது பூனை. தன்னைத் துரத்தும் அந்தச் சோர்ந்து போன பூனையிடமிருந்து வெகு லாவகமாக தப்பிக் கொண்டது எலி. தப்பித்த எலி தன் வளைக்குள் இருந்தபடி பூனையைப் பார்த்துக் கேட்டது. 'இயலாத என்னைத் துரத்துகிறாய், தப்பித்து அடைக்கலம் புகுவதற்கு எனக்காவது சின்ன பொந்தேனும் உண்டு. நீயோ என்னை விடப் பலமானவன் ஆனாலும் உனக்கு ஒரு கூடேனும் இல்லையே' பூனைக்கு பசியை விட யோசனையே இப்போது அதிகமாயிற்று.

'இயலுமானவன் புத்திசாலியுமல்ல
இயலாதவன் மடையனுமல்ல'


-பிறையன் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையடிப்பக்கம்



## பலிச்சிடுமோ

துலைவானே....துலைவானே யெண்டு
என்மேலுள்ள அன்புபட்சம் காரணமாய்
அண்டைக்கு ஆச்சி
அடுக்காகத் திட்டினது
இண்டைக்க நைச்சாத்தான்
தொண்டேக்க இறுக்கிது
எண்டைக்காவது பலிச்சிடுமோண்டு

## சும்மா போச்சு

சண்டைக்குப் போனதில்லை
சாரத்தைத் தூக்கிக் க(ர)ட்டினதுமில்லை
சாமான் வாங்கவெண்டு
சங்கக்கடை போனாலும்
வம்புக்கு நிண்டதில்லை
நம்பினால் நம்புங்கோ
சும்மாதான் சுட்டாங்கள்
அந்தாள் செத்துப்போச்சு
குண்டுக்குத் தெரியுமோ – தான்
குடிச்சது பச்சைத்தண்ணியெண்டு

– பனையடிப் பாடகன்





# முடி வெட்ட முடியாமல்

திருமணமான ஆண் திருமணமாகாத இன்னொரு பெண்ணிடம் தொடர்பு வைத்துக்கொள்ளலாம், ஆனால் திருமணமான பெண் வேறு எந்த ஆண்களுடனும் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது. இப்படி ஒரு சட்டம் நடைமுறையில் இருக்கிறது என்றால் நம்ப முடிகிறதா? நம்பித்தான் ஆகவேண்டும்.

ஆனால் இந்தச் சட்டம் இலங்கையில் அல்ல, உகாண்டாவில் இருக்கிறது. இப்படி சமத்துவமற்ற முறையில் அமுலில் இருந்த ஆண்களுக்கும், பெண்களுக்குமான சில சட்டங்கள் பல நாடுகளில் விலக்கிக்கொள்ளப் பட்டிருக்கின்றன.

குழந்தையின் தந்தை இறக்கும் போது இன்னொருவரை தன் குழந்தையின் பாதுகாவலராக நியமித்தால் அந்தக் குழந்தையின் மீதான உரிமையை தாய் இழக்கிறாள்.

மனைவி இறந்தால் அவளுடைய சொத்து முழுதும் கணவனைச் சேர்கிறது. கணவன் இறந்தால் ஒரு குறிப்பிட்ட அளவு சொத்து மட்டுமே மனைவியைச் சேர்கிறது.இவையெல்லாம் கூட உகண்டாவில் அமலில் இருக்கும் சட்டங்கள் என்பது சற்று வியப்புக்குரியவை நடைமுறையில்தான். மிகப்பெரிய போராட்டத்திற்கும், விவாதத்திற்கும் பிறகு தற்போது இந்த சட்டங்கள் எல்லாம் விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

மேலதிகமாக மற்றுமொரு தகவல் கணவனின் அனுமதி இல்லாமல் ஒரு பெண் தன்னுடைய தலை முடியை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிரிப்பதற்கு மட்டுமல்ல








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு சிங்கமும் சில பன்றிகளும்

இதோ வருகிறது, அதோ வருகிறது என்று ஏமாற்றி ஏமாற்றியே ரஜினி ரசிகர்களை எல்லாம் 'முள்ளில் படுக்கையிட்டு இமையை மூடவிடாமல் வைத்திருந்த 'சிவாஜி' 'The Boss' இறுதியில் வந்தே விட்டது. வெளியீட்டுத் திகதியை தொடர்ந்து பின் போட்டுப் பின்போட்டுச் செய்யும் "சூக்காட்டுதல்" என்பதே பெரும் விளம்பர உத்திதான். வரலாறு காணாத அடுக்கடுக்கான விளம்பரங்களின் பின்னால் சிவாஜி ஆற அமர வந்தே விட்டது. வெளிவந்த முதல் இரண்டு மூன்று நாட்களுக்கு கொழும்புப் பாடசாலைகளில் நன் மாணவ மணிகளின் வருகையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததாகத் தகவல். அப்போ தமிழ் நாட்டின் நிலைமை எப்படியிருந்திருக்கும் என்பதை நீங்களே ஊகித்து கொள்ளுங்கள்.!!!

பால் காவடி, பன்னீர்க் காவடி, புஷ்பக் காவடி, துலாக் காவடி, தூக்குக் காவடி போன்ற சுத்த வைச அனுஷ்டானங்கள் ஒரு புறம்...

ஆடு பலியிடுதல், கோழி அடித்து விருந்து வைத்தல் போன்ற அசைவ வீர வழிபாடுகள் மறுபுறம்.....

மாணவ மணிகளுக்கு இலவசமாகக் கொப்பி, பென்சில் வழங்கி, அவர்களது கல்வித்தரத்தை மேம்படுத்தும் மக்கள் நலத்திட்டங்கள் இன்னொரு புறம்...

வெளியீட்டுத் திகதியன்று பிறந்த சில குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்த 'பொன் எழுத்துக்களினால் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்று நிகழ்வுகள்' ஒரு புறம்.

டெல்லி வரை சென்று பிளாக் மார்க்கெட்டில் டிக்கட் வாங்கிய 'தீர்த்த யாத்திரைகள்' வேறொரு புறம்...

அடடா அடடா! அரைச் சோடாப் போத்தல், சோளப் பொரி, சொக்கலேட் பார் ஆகியவற்றுடன் மட்டுமே படம் பார்க்கும் 'ஈழத் தமிழர்களின் இடர்' அவர்களுக்கு இன்னும் ஏற்படவில்லை என்பதையிட்டு அமைதி காண்போமாக!

தமிழ்த் திரைப்பட வரலாற்றிலேயே (சில வேளை இந்தியத் திரைப்பட வரலாற்றிலேயே எனவும் திருத்த நேரிடலாம்) மிக அதிக அளவில் பிரிண்ட் போடப்பட்ட இந்தப் படத்தை... வந்தாரை வாழ வைக்கும் தமிழகத்தில் மட்டுமல்ல... பூமிப்பந்தெங்கும் புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களால் உயர்த்திப் பிடிக்கப்படும் தமிழ்க்கொடி, தாழ்ந்து பறக்கும் தமிழ் கூறு நல்லுலகு எங்கணும் மட்டுமல்ல...கொம்யூனிஸக் கிலி பிடித்த கேரளாவில் மட்டுமல்ல... சுந்தரத் தெலுங்கில் பாட்டிசைக்கும் ஆந்திராவில் மட்டுமல்ல... காவிரி ஊறும் கர்நாடகாவில் மட்டுமல்ல... நம் அறிவுக்கும், கற்பனைக்கும் எட்டாத தூரத்துக்கும் அப்பால்... பல படங்களின் வருகையை தள்ளிப்போட்ட இந்த பராசக்தி ஹீரோவை, பிளாக்கில் டிக்கெட் எடுத்து, நாய் படாப்பாடு பட்டு பார்க்கப் போனால்...

படமோ... கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்கான High Te[illegible] திட்டங்களை Super star















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஜினி தனது ஸ்டைலில் நடைமுறைப்படுத்துவதைப் பற்றிப் பேசுகிறது!!. ஏ.வி.எம்., சங்கர், ஏ.ஆர் ரஹ்மான், சுஜாதா, ரஜினி, விவேக் முதலிய தமிழ்த் திரைப்படத்துறையின் இன்றைய உச்சநிலை வியாபாரிகள் எல்லோருமாகச் சேர்ந்து தமிழ்த் திரைப்பட ரசிகனை திறந்த வாய் மூடாமல் திரையையே வெறித்துப் பார்க்க வைத்திருக்கிறார்கள்.

மனிதனுக்குச் சுயபுத்தி அவசியமென்பதால், அதை பத்திரமாக வீட்டிலேயே வைத்துவிட்டுப் போனால், இந்தப் படத்தை நன்கு ரசிக்கலாம்.

ரஜினி பொய் முடி, கிலோக் கணக்கில் மேக்கப் பவுடர்கள் முதலியவற்றின் உதவியுடன் என்றும் இளமையாய் இருக்கும் பரகசியத்தையும், ஸ்ரேயா என்னும் மெழுகுப் பொம்மை வளைந்து வளைந்து ஆடுவதையும், விவேக் அடிக்கிற கோமாளிக் கூத்துக்களையும், கம்யூட்டர் கிராஃபிக்ஸ் இல் நல்ல விவேகியான சங்கர் நமக்கெல்லாம் அளக்கின்ற 'கதை' களையும், ஏ.ஆர். ரஹ்மானுக்கு ஏற்பட்டிருக்கும் தீராத வயிற்று உபாதைகளின் காரணமாக அவர் எழுப்பும் சத்தங்களையும்...... இன்னும் பலவற்றையும் ரசிக்கலாம். அவற்றையிட்டு பெருமிதப்படவும் செய்யலாம்.

**உதாரணம் 1:** சிவாஜி கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்குவதை குறியீடு மூலம் சங்கர் உணர்த்துகின்றார். அதாகப்பட்டது கரிக்கறுவலான ரஜினியை அசல் பேர்சியன் வெள்ளைக் கலருக்கு (ரோஸ் கலருக்கு) மேக்கப் மூலமும் கிராபிக்ஸ் மூலமும் சங்கர் மாற்றி விடுகிறார். ஏ. ஆர். ரஹ்மான் அவரை முக்கி முக்கிப் பாட வைக்கிறார். நடனப் புயல் பிரபுதேவா உள்ளங்காலில் கொப்புளம் வந்தவனைப் போல அல்லது நரகலை மிதித்து விட்டவனைப் போல ரஜினியை துள்ளித் துள்ளி காக்காய் வலிப்பு ஆட வைக்கிறார்.

**உதாரணம் 2:** சங்கர் பணத்தை தண்ணீராய் இறைத்துப் படம் எடுப்பதில் பெயர் போனவர். அதையே குறியீடாக கடைசிச் சண்டைக் காட்சியில் பணம் பற பற என்று பறக்கிற காட்சியாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

**உதாரணம் 3** சமீப காலங்களாக தமிழகத்தில் ஈழத்தமிழர் ஆதரவு அலை பலமாக வீசுகின்றதாம். அதில் அடிப்பட்டு போன விவேக் சுழட்டுறதுக்கு நேராக யாழ்ப்பாணம் போகிற' கதையும் ஒன்று







கதைக்கிறார். தியேட்டரில் விசில் சத்தம் காதைப் பிளக்கிறது.

**உதாரணம் 4**

சுஜாதாவின் சுருக் நறுக் நடைக்கு (சுருக்கிய நறுக்கிய என்று நீட்டி முழக்குவானேன்) பேர் போனவர். முந்திய ரஜினி படங்களில் (திரும்பத் திரும்ப வேறு வேறு தொனிகளில்) வரும் பஞ்ச் டயலாக்கைப் போலல்லாது இப்படத்தில் தனது பங்கிற்கு அதை ஒட்ட நறுக் செய்திருக்கிறார்.

படத்தில் இரண்டு நல்ல நடிகர்கள் இருக்கிறார்கள். ஒருவர் சுமன். மற்றவர் ரஜனி. (ரகுவரன் பாவம் அவரை விட்டுவிடலாம்.)

ஆனாலும்.... ரஜினியைப் பற்றி முன்னரே ஒரு நண்பர் 'ரஜினிக்கு எழுபதுகளின் கடைசியில் பிடித்த சித்தப் பிரமை இன்னும் மாறவில்லை' என ஒற்றைவரி விமர்சனம் ஒன்றை எழுதியிருந்தார்.

மானிடர்களுக்கு பால் குடிப் பருவம் (*Mummal Stage*) என்று ஒன்று இருக்கிறதாம். ரஜினி தனது வாயை வைத்துப் பண்ணுகின்ற சேட்டைகளைப் பார்த்தால், அந்தப் பால் குடிப் பருவத்திலிருந்து இன்னும் அவர் வளரவில்லையோ என்று எனக்கு ஐயமாக இருக்கிறது. அவர் ஒரு பால் குடி.

ஷங்கரே, நீங்க ரஜனியை வைச்சு காமெடி கீமெடி ஒண்ணும் பண்ணலையே நண்பரே.

வரும் போது என்னத்தைக் கொண்டு வந்தம் போகும் போது என்னத்தைக் கொண்டு போகப் போறம் ? எண்டு நீ சொல்லும் போது, எல்லோரும் உன் முகத்தைப் பார்த்தாங்கள் நான் மட்டும்தான் உன்ர காலைப் பார்த்தேன்.

ஏன்?

எங்கே இருந்தடா சுட்டாய் அந்த புது செருப்பை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெய்யோன் ஒளி தன் மேனியின் விரி சோதியில் மறைய!

ஐரோப்பியரின் நடிப்புலகிற்கு ஒரு வாய்ப்பிருக்கிறது. அவர்களின் மேனியின் நிறம்(வெள்ளைக்காரர்களைச் சொல்கிறோம்) படப்பிடிப்பின்போது அதிக ஒளித்தெறிப்பையும், குறைந்த நிழலையும் படப்பிடிப்பாளருக்குத் தரும். எம்மவர்களை அதிலும் குறிப்பாக நம்ம ரஜினி போன்றவர்களுக்கு இவை தலைகீழாகும். பொதுவாக மேற்கொள்ளப்படும் நிறத்திருத்தங்கள் (Color correction) அதிக பலாபலன்களை ஒளிப்பதிவு இயக்குனருக்கு இதில் தருவதில்லை. சிவாஜி பற்றிய விமர்சனத்தை ஒருபுறம் தள்ளி வைத்து விட்டால், இவ்விடயத்தில் பாரியதொரு பணிக்கடமையை சிவாஜியின் ஒளிப்பதிவு இயக்குனர் கே.வி.ஆனந்தும் குழுவும் செய்து முடித்திருக்கிறார்கள். எங்கள் தலையில் அரைப்பது மிளகாய் என்றாலும் அற்புதமாக அரைத்திருக்கிறார்கள். ரஜனியை ஆறரை நிமிடத்துக்கு வெள்ளைக்காரனாக்கும் முயற்சிதான் அது. இதற்காகவே ரோசாக் கன்னத்து வெள்ளைக்கரி ஒருவரை தேடிப் பிடித்துப் போட்டிருக்கிறார்கள். இதற்கு வெறும் வெள்ளைத்தோல் மட்டுமே போதாது, நடிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக படையப்பா பாணியெல்லாம் தெரிய வேண்டிய கட்டாயம். வெள்ளைக்காரத் தோல் அழகோடு நம்ம நாயகன் வந்துபோன அத்தனை காட்சிகளிலும் இந்த வெள்ளைக்காரியையும் நடிக்க வைத்தார்கள். 6 1/2 நிமிட ஸ்ரைல் பாடல் காட்சியிலும் அதற்கு முன்னரும் பின்னருமாக மொத்தம் 630 shots படமாக்கப்பட்டன. அத்தனை shotsகளிலும் இந்த சீமைக்காரியையும் நடிக்க வைத்தார்கள். இருவரையும் தனித்தனியாக படமாக்கிய 630+630 shotsகளையும் 4000 resolution இல் ஸ்கான் பண்ணவேண்டியிருந்தது. அவ்வாறு எடுக்கப்பட்ட 9000 ஸ்கான் பிரேம்களும் Eyeon "Digital Fusion" என்ற கணிணி மென்பொருளின் உதவியோடு வெள்ளைக்காரியின் தோல் ரஜினியின் உடலோடு mapping மூலம் இணைக்கப்பட்டது. (Mapping ஐ எப்படி தமிழில் போடலாம் என்று தெரியவில்லை.) ஆனால் இந்த 'ஒட்டு' வேலை, தலையைப் பிய்க்கும் ஒன்றாகவே அமைந்திருக்கும்.



தனித் தனியாக படமெடுப்பதிலேயே ஒளியூட்டல் மாற்றங்கள் தேவை(வெள்ளைக்காரிக்கு குறைந்த ஒளி, நம்மவருக்குக் அதிகம்) இதில் தொடங்கி ரஜனியின் அங்க அசைவை வெள்ளைக்காரியையும் பண்ண வைத்து (இப்ப கை கால் முறிவு நெரிவு வைத்தியசாலையில் அவர் பாவம், இருக்கலாம்), பிறகு உடல் அளவுகளை கணிணி மூலம் மாற்றி.. இப்படியாக ஆயிரம் தலையிடி. கை நிறைய காசு கிடைத்தால் என்ன இடியும் இடிக்கலாம். இப்படியாக இடிபட்ட கணிணி வரைகலை நிபுணர்களின் மொத்த எண்ணிக்கை 25. திரையில் ஆறரை நிமிடம் ஓடிய காட்சிக்கு இவர்கள் எதுத்துக் கொண்டது கிட்டத்தட்ட ஒரு வருடமாம். ஆண்டவரே இவர்களை மன்னியும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணங்களும் பதிவுகளும்

## பேருவளை மருதானை

அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தோம். எப்போதெல்லாம் மழைக்கு நாங்கள் தயாராக வரவில்லையோ, அப்போதெல்லாம் பெய்யும் மழை அன்றும் பெய்யத் தொடங்கியது. மருதானையை எட்டிய நேரம் எங்களை தடுத்தே ஆகவேண்டும் என்பதுபோல மழை வலுக்கத் தொடங்கியது.ஒரு வெற்றிலைக்கடை ஓரத்தில் ஒதுங்கினோம், எங்கள் பேச்சுக்குத் துணையாக வெற்றிலையை வாங்கிப் போட்டபடி வெற்றிலைக் கடைக்காரர் கௌஸ் நாநாவோடு பேச்சுத் தொடுத்தோம். அவரது சொந்த ஊர் பேருவளை.கிழக்கிலங்கையை விட பேருவளயில முஸ்லீம்களுக்கு ஏதாவது சிறப்பிருக்கிறதா? என்றபடி எமது கேள்விக் கொக்கியை வெற்றிலைக்கடை கௌஸ் நாநாவிடம் தூக்கிப் போட்டோம். 'ஷா! பேருவலை முஸ்லிம்கள்ட பழைய எடமெலியா?' என்று புன்னகையுடன் தன் பேச்சைத் தொடங்கினார். 'நளீம் ஹாஜியார் கெட்டின நளீமியா, கிச்சிமலைப் பள்ளி, முஸ்லிம்கள்ட முதலாவது கெட்டுமானப் பள்ளி, மாணிக்க பிஸ்னஸ், மீன் பிடித் தொழில்' என்று தன்னிடத்துப் பெருமைகளை மகிழ்ச்சியோடு அடுக்க ஆரம்பித்தார். "அது மட்டுமா நாங்க அரசாங்கத்துக்கே கடன் கொடுத்தவங்க எல்லியா?" என்றார் புன்னகையோடு. அட அப்படியா என்று கேட்டுக் கொண்ட எங்கள் மனதில் அடுத்த பயணப் பதிவுக்கான இடம் தீர்மானமாயிற்று.

யாரும் சொல்லாத செய்திகளை அள்ளிவரும் கடலலைகள் கதை பேசும், பேருவளைக்கான எமது பயணம், ஒரு அதிகாலையில் ஆரம்பமானது. சுற்றுலா நகரை சுற்றிப்பார்ப்பதோடு சில குட்டிச் செய்திகளுடன் திரும்பி வரலாம் என்ற எண்ணத்தில் பயணத்தைத் தொடங்கினோம். கடல் வளத்தையும், நாட்டுக்கொரு சபாநாயகரையும் தந்த அந்த நகரம் எமக்கு என்ன சொல்லப் போகிறது என்ற





பேருவளை மருதானை பள்ளி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டிருந்தால் பொருளாதார ரீதியில் எமக்கு பெரும் நன்மைகள் கிடைத்திருக்கும், இன்றிருக்கும் மீன்பிடித் தொழிற் பிரச்சினைகள் இருந்திருக்காது" என்று மனமுடைந்து பேசுகிறார் ஏ.ஜே.எம். ஹாரிஸ்.

அரேபிய வர்த்தகர்கள் வந்திறங்கிய 'பஹா ருவல' (படகு இறங்குதுறை) என்ற சிங்கள சொல்லில் இருந்தே பேருவளை என்ற பெயர் வந்ததாக சொல்லப்படுகிறது. இப்படி வந்த வர்த்தகர்கள் சிங்கள பெண்களை மணம் முடித்து அங்கு குடியேறினர். அரச குமாரத்தியை தலைமை வியாபாரி ஒருவர் திருமணம் செய்ததாக கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

இலங்கையின் முதலாவது கட்டுமாணப் பள்ளியாகிய மஸ்ஜிதுல் அப்ரார் (பேருவளை மருதானைப் பள்ளி) வரலாற்று முக்கியத்துவம் கொண்டது. அன்றிருந்த மீனவர்கள் தொழுகைக்கு முன் தம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்வதற்காக கட்டப்பட்ட தொன்மை மிக்க குளமும் ஏனைய வரலாற்றுக் காட்சிகளும் இங்கு காணப்படுகின்றன.

சுமார் 7500 குடும்பங்கள் வசிக்கும் பேருவளை மருதானைக் கிராமத்தில் இரத்தினக்கல் வியாபாரத்திலும் ஒருசிலர் ஈடுபடுகின்றனர். அக்கிராமத்தின் பிரதான தொழிலாக இருப்பது மீன்பிடிதான். அங்கு மருத்துவ மற்றும் கல்வி வசதிகளில் பாரிய பின்னடைவு இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் பொதுமக்களின் நலன்மீது அக்கறை இல்லாத அரசியல்வாதிகள்தான் என்று கோபப்படுகிறார்கள் பேருவளை மருதானை மக்கள்.

இன மோதல்கள் மூன்றினை பேருவளை- மருதானைக் கிராமம் சந்தித்துள்ளது. இவற்றில் 1972,1991 சம்பவங்களை விட 2004ம் ஆண்டு நடந்த சம்பவம் பாரிய இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது. சிங்கள- முஸ்லிம் சமூகங்களுக்கிடையே ஏற்பட்ட புரிந்துணர்வின்மையை பொலிஸார் வளர்த்து விட்டதாக கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். சம்பவத்தில் காயமடைந்த மூவர் உயிரிழந்தனர். ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பேருவளை மருத்துவமனைக்கு எடுத்து செல்ல முடியாது போனதே அதற்குக் காரணமாய் இருந்தது.



பேருவளை - மருதானையில் ஆண்களை விட பெண்களே அதிக ஆர்வத்துடன் கல்வி கற்கிறார்கள். இப்பகுதியில் உள்ள மூன்று பாடசாலைகளில் இரண்டு பெண்களுக்கானது. மற்றையது கலவன் பாடசாலை. இப்பிரதேசத்தில் ஆண்களின் உயர்தரக் கல்விக்கு பாடசாலை இல்லையே என்று எம்முடன் பேசிய ஆண்கள் அங்கலாய்த்துக் கொண்டனர்


கல்வி வாய்ப்பு இருந்தாலும் இப்பகுதி பெண்கள் தொழில் செய்வதை விரும்புவதில்லை என்று தெரிகிறது. இங்கு மகிழ்ச்சி தரக் கூடிய ஒரே விடயம், பெண்கள் மீது சீதனச் சுமை இல்லாததுதான். ஆண்களை ஏலப்பொருளாக வைத்து விலை பேசிக் கூவி விற்கும் கல்யாணச் சந்தை இங்கு இல்லை என்பது எம்மை நிம்மதிப் பெருமூச்சு விட வைத்தது.

நாட்டின் பிரச்சனைகளுக்கு சமாதான முயற்சியே கை கொடுக்கும் என்று இவர்கள் முற்றுமுழுதாக நம்புகிறார்கள்.நாட்டை அல்லோல கல்லோலப் பட வைத்த சுனாமி விட்டுச் சென்ற வடுக்கள் பற்றி நாம் பேசினோம். ஏனைய பிரதேசங்களைவிட இங்குள்ள மீட்பு மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் ஓரளவு திருப்தி தருகின்றன.விடைபெறுகிறோம்.

"எத்தனையோ பத்திரிகையாளர்களும், ஆய்வாளர்களும் வந்து தகவல் எடுத்துக்கொண்டு போகிறார்கள் ஆனால் பேருவளை-மருதானைக்கு இன்னமும் நல்லது எதுவும் நடக்கவில்லை" அவர்கள் சொல்வது காதில் கேட்கிறது. கேட்க வேண்டிய காதுகளுக்கு இவை எட்டுமா?!

தடங்கள் பதிவாகும்!

தொகுப்பு : அப்துர் ரஹ்மான், வ.சிவஜோதி



இவன் ஒன்றும் சிகப்புச் சட்டைக்காரன் அல்ல அவர்களுக்கு இருப்பதை விட அதிக குழப்பத்தில் இருக்கின்ற பேருவளை - மருதானைச் சிறுவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பதா! இறப்பதா?

**"இறப்பதற்குத் தனியாக காரணங்கள் தேவையா இருப்பதற்கு காரணங்கள் இல்லையென்பதை விட?"**

கனவுகள் சலித்துப்போன ஓரிரவில் இதனை எழுதத் தொடங்குகிறேன். அவரவர் கோப்பைகளில் அவரவருக்குப் பிடித்த மதுவை நிரப்பிக்கொண்டு ஏதாவதொரு போதையில் மூழ்கிக்கிடக்கிறோம். எதிலாவது கிறங்கிக் கிடப்பதுதான் பாதுகாப்பானது என்ற எண்ணத்தின் விதை ஒவ்வொரு மனசுக்குள்ளும் ஊன்றப்பட்டிருக்கிறது. சித்தம் . சிதைவதற்கு மிக முந்தைய கணத்தில் ஒருவன் சொல்லிக்கொண்டிருந்த வார்த்தையைப் போன்ற, ஒத்த சாயலையுடைய இந்த நாட்களை என்ன செய்வதென்று தெரியவில்லை. அதே காலையில் அதே சாலையில் அதே ஆறு மணிக்கு துணைக்கு சடைநாய்க்குட்டி சகிதம் அதே கிழவர் நடந்து போகிறார். முன்பொருநாளில் "எத்தனை அழகியது இந்த வாழ்க்கை என்று பல தடவை வியந்திருக்கிறேன். வினோதரசம் நிரம்பிய அண்மைய நாட்களின் நடப்புகள், அந்த வார்த்தைகளைக் பார்த்து ஓசையெழச் சிரிக்கின்றன. 'வாழ்வொரு அபத்தம்' என்ற கசப்புப் படிந்த வரி மண்டைக்குள் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. 'வேடிக்கை மனிதரைப்போல அல்லாது வாழ முயன்று களைத்துப் போனவர்களின் உதடுகள் சலித்துத் துப்பிப் போட்ட வார்த்தைகளில் ஒன்றிரண்டைப் பொறுக்கிக்கொள்வதைத் தவிர புதிதாக ஒன்றுமில்லை.

' நமக்குள் இருப்பதுதான் புத்தகத்தில் இருக்கிறது அதைவிட ஒன்றுமில்லை' என்று நகுலனும், இந்த நதி எத்தனை பேரைப் பார்த்திருக்கிறது' என்று கல்யாண்ஜீயும் சொன்னது ஞாபகத்தில் வருகிறது. அடுக்கி வைத்த சீட்டுக்கட்டை அவரவர்க்குப் பிடித்தபடி அடுக்கியும் கலைத்தும் விளையாடுகிறோம். என்பதுதானே உண்மை. புதிதாகச் சொல்ல ஒன்றுமில்லை. இருப்பினும், பேசுவதன் மீதான விருப்பு வற்றிப் போய் விடவில்லை. தனது இருப்புக் குறித்து பிரக்ஞை மற்றவர்களிடம் இல்லாமற் போய்விட்டால் என்ன செய்வது என்ற பதைப்பே எழுதத் தூண்டுகிறதோ என்னவோ....! வாழ்வோடு பிணைத்து வைத்திருந்த கயிறுகள் ஒவ்வொன்றாக அறுந்து கொண்டே வருகின்றன. வாழ்க்கை என்பது, இப்போது காண்பது போல வித்தைக்காரனின் கூடாரமாக, சர்க்கஸ் காட்டுபவன் நடக்கும் கயிறாக, மகாநடிகர்களின் மேடையாகத்தான் எப்போதும் இருந்ததா...? இதுவரை வாழ்வை அழகிய பூவனமாகத் தோற்றப்படுத்திக் கொண்டிருந்த மாயக்கண்ணாடியைக் கழற்றி வைத்ததனால் வந்த மாற்றமா....? "ஆகா அழகியது" என்று கொண்டாடிய (உண்மையில் கொண்டாடினேன் சுகுணா) காலங்கள், இப்போது எல்லோரும் எழுதிவரும் கிறுக்குத்தனமானவைதான் என்று கண்டுக் கொண்டபின் யாவற்றையும் யாவரையும் பார்த்து நகைக்கவே தோன்றுகிறது. இருப்பிற்காக, உயிர் தரித்திருத்தலுக்காக கொடுக்கும் விலை மிக அதிகமோ என்ற எண்ணம் வருகிறது. எழுத்து, உறவு, வாசிப்பு எல்லாமே அணைந்து போய்க் கொண்டிருக்கிற வாழ்வின் மீதான விருப்பின் திரியைத் தூண்டிவிடுவதற்காக நாமாகவே இழுத்துப் போட்டுக் கொள்கிறவையாகவே எல்லாம் இருக்கின்றன. விளையாடும் குழந்தையைச் சுற்றிக் கார், கட்டிடப் பொருத்துகைகள், பொம்மைகள் இறைந்து சற்றி கிடப்பதைப் போல, 'நான் இன்ன இன்ன காரணங்களுக்காக வாழ்கிறேன் என்று எமக்கும் எம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும் நிரூபிப்பதற்காகவே எம்மைச் சற்றி பலவற்றையும் சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறோம். உறவுகள் என்ற கசப்பு மருந்தின் மேல் அன்பு என்ற தேனைப் பூசி விழுங்க வேண்டியிருப்பதை அறியாத அப்பாவிகள் நாங்கள்.

அன்பு உலகை ஆள்வதென்பது, டைனோசர் போல அருகி அழிந்துகொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. அன்புதான் உலகை ஆள்கிறதெனும் எனது அண்மைய தோழா! மாபெரிய அபத்தத்தைப் பேசுகிறாய். நீ சொல்வது சரியெனில், அன்னை தெரேசாவையும் மகாத்மா காந்தியையும் (விமர்சனங்களோடும்) ஒன்று... இரண்டு....மூன்று என்று விரல் விட்டு எண்ணவேண்டிய துர்ப்பாக்கியம் ஏன்? எங்களில் எத்தனை பேர் மற்றவரின் துயரங்களுக்காக சகிப்புத்தன்மையோடு செவிமடுத்துக் கொண்டிருக்கிறோம்.

எங்களில் எத்தனை பேர் எங்களால் இயலக்கூடிய உதவிகளைச் செய்வதற்கு சோம்பற்பட்டு விலகிக் கொண்டிருக்கிறோம். எமக்குப் பிடித்த திசை நோக்கி நகராத





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடல்களிலிருந்து எம்மைத் துண்டித்துக் கொள்ளும் போது தனிமைப்படும் இதயங்களைப் பற்றி எம்மில் எத்தனை பேர் சிந்திக்கிறோம்?

அதிகாரங்கள்தான் உலகை ஆள்கின்றனவேயன்றி அன்பு அல்ல. அதிகாரத்தைக் கையிலேந்திய பிதாமகர்கள் எம் மீது மேலாதிக்கம் செலுத்தும் பிறப்புரிமை பெற்றவர்களாக, எம்மை அலைக்கழிக்கத்-தக்கவர்கள்ாக இருக்கும் உலகத்தில் ஒரு பூச்சிகளாக வாழ விதிக்கப்பட்டிருப்பது கொடுமையிற் கொடுமை! தீயவர்களுக்கும் அவர்கள் சுமந்தலையும் துப்பாக்கிகளுக்கும் இன்னபிற ஆயுதங்களுக்கும் பயந்து கொண்டு இந்த உயிரை எத்தனைக்கென்று கக்கத்தில் இடுக்கிக் கொண்டலைவது? முன்னொரு போதும் அறியாதவர்களால் இரவோடிரவாக விரட்டப்படுகிறோம். கைது செய்யப்படுகிறோம். எவனோ வெட்டிய பள்ளத்தில் தெருநாயைப் போல இழுத்தெறியப்பட்டுப் புதைந்து கிடக்கிறோம். இழைத்து இழைத்துக் கட்டிய வீட்டில் நீ இருக்க முடியாதென யாரோ ஒருவன் கட்டளையிடும் குரலுக்குப் பணிகிறோம்.

கனவுகளையும் கற்பனைகளையும் யாரோ ஒருவனுடைய துப்பாக்கியின் பெருவாய் தின்று தீர்க்கிறது. எங்களது ஒட்சிசன் குழாயை எந்த நிமிடத்திலும் எவரும் பிடுங்கிவிடத் தகு நோய்ப்படுக்கையில், கையறு நிலையில்தான் இருக்கிறோம். முதலில் இந்த ஜனநாயகம்… சமத்துவம்.. மனிதம்.. தனிமனித உரிமை.. மண்ணாங்கட்டி.. இந்த வார்த்தைகளை எமது அகராதி-யிலிருந்து அழித்து விட வேண்டும்

நிலவுக்கஞ்சிப் பரதேசம் போன பாவிகளானோம். எங்கில்லை இந்த நிலவு,? எங்கில்லை மரண பயம்? ஓடிக் களைத்து மூச்சுவாங்குகிறது. இருந்தும் கையுயர்த்தி மண்டியிட்டு "தயவுசெய்து என்னைக் கொல்லுங்கள் என்று சொல்ல முடியவில்லை." வாழப் பிடிக்கவில்லை. செத்துப் போகிறேன் என்று கண்ணீரில்லாமல் சொல்லி விடைபெற்றுப் போகிற மனத்திண்மை ஏனின்னும் வாய்க்கப்பெறவில்லை.. ? வாழ்வின் மீது அத்தனை வெறித்தனமான காதலா? நான் இல்லாவிட்டால் ஏனையோர் என்ன ஆவர்




என்பதெல்லாம் எமது மரணபயத்தின் மீதான சப்பைக்கட்டுகள் அல்லவா?


பதின்மூன்று ஆண்டுகளின் முன் நீ தற்கொலை செய்து கொண்டபோது ' அவளொரு கோழை என்றார்கள்.நீ வாழ்ந்திருக்கக்கூடிய காரணங்கள் எல்லோராலும் அடுக்கப்பட்டன.

இல்லையடி! வாழ்வை எதிர்த்துக் கலகம் செய்து, உயிர் எனக்கொரு மயிர் என்று பிடுங்கி அவன் முகத்தில் விட்டெறிந்து போன நீயொரு தீரி! உன் கவிதைகளை எரித்து உன்னையும் மாய்த்துப் போன சிவரமணி! நீயும் நின் கவிதையும் எங்களைவிட உயிர்ப்புடன் இருக்கின்றன. இரண்டு மாதங்களின் முன் ஒற்றைக் கயிற்றிலே தொங்கி உன்னை இறுக்கியிருந்த அத்தனை தளைகளையும் அறுத்தெறிந்து போன சின்னப் பெண்ணே! நீ வணங்கத்தக்க துணிச்சல்காரி!

தற்கொலை என்பது, வாழ்வின் முகத்தில் - தெரிந்தே காயப்படுத்திய சகமனிதர்களின் முகத்தில் காறியுமிழும் எச்சில்தான். விநோதம் என்னவென்றால், மெல்லிய சங்கடத்தோடு சுற்றுமுற்றும் பார்த்து விட்டு ஒரு பறவையின் எச்சத்தைப் போல அதை வழித்தெறிந்து விட்டுப் போய்க் கொண்டே இருக்கிறோம். தற்கொலை செய்பவர்கள் வாழ்வை வென்றாலும், தம் வலியை கன்னத்தில் அறைந்து உணர்த்துவதில் தோற்றுத்தான் விடுகிறார்கள்.

நாம் போன பின்னும் இவ்வுலகம் இருக்கும். நெருங்கியவர் அடித்துப் புரண்டழுவர் சிலநாட்கள். பிணந்தூக்கிப் போன பின்னால் வீடு கழுவிச் சமையல் நடக்கும். துக்கத்தில் இறுகிய மலம் இளகி வெளியேறி மறுநாள் வயிறு இலேசாகும். ஒரு பாடல்,ஒரு வார்த்தை, ஒரு புகைப்படம், தெருவில் எதிர்ப்படுகிறவரில் ஒரு சாயல் எம்மை நினைவுறுத்தும். நீங்கள் இணையத்தில் எழுதுகிறவராக இருந்தால், அஞ்சலிக்கவிதைகள் நான்கைந்தும் சில நினைவுக்குறிப்புகளும் பதியவிடப்பட்டுவாசிக்கும் ஏனையோரை கண்கலங்கவோ அல்லது 'இதெல்லாம் கவிதையாகுமோ என பல்கடிக்கவோ வைக்கலாம். வேறென்ன…பூவுதிரும் சாலை வழி மனிதர்கள் நடந்து போக அன்றைக்கும் அதிகாலை அழகாக விடியும். அவ்வளவே!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோர்ன் அடித்தால் அபராதம்

சூழல் மாசில் நாம் அதிக கவனம் செலுத்தாத விடயம் ஒலி மாசுதான். உயிர் மீதே கவனம் செலுத்தாதவர்கள் அதீத ஒலியின் மீதா கவனம் செலுத்துவார்கள் என்ற கேள்வியை புறம்தள்ளிவிட்டுச் சிந்திந்தால், ஒலிமாசை நாம் கண்டு கொள்வதே இல்லை என்பது வெளிப்படையானது. கத்திப் பேசுகிறவனை பட்டிக்காட்டான் என்று சொல்லும் நகரத்தின் சத்தங்கள், அதி பட்டிக்காட்டுத்தனமாக இருக்கின்றன. வாகனங்கள் எழுப்பும் இரைச்சலைவிட அவை எழுப்பும் ஹோர்ன் சத்தங்கள் வளரும் நாடுகளின் தலையிடியாக மாறியிருக்கிறது. வாகனங்களுக்கான ஹோர்னை கண்டுப் பிடித்தவர் கூட கற்பனை செய்திருக்க முடியாத அளவிற்கு வாகன ஓட்டுனர்கள் அவற்றை பயன்படுத்துகிறார்களோ என்று சில நேரங்களில் எண்ணத் தோன்றுகிறது. காட்டுக்குள் அடிப்பதையெல்லாம் நாட்டுக்குள் அவர்கள் அடித்துத் தொலைக்கிறார்கள். இத்தொல்லையைத் தீர்க்க புதிய சட்டமொன்று பிறந்திருக்கிறது. இனிமேல் தேவையில்லாமல் ஹோர்ன் அடித்தால் அதற்காக வாகன ஓட்டுனர் அபராதம் செலுத்தியாக வேண்டும்.

இதில் கவலைக் குரிய விடயம் என்னவென்றால் இது நடை முறைப்படுத்தப்படுவது இலங்கையில் அல்ல சீனாவில். சீனத்து நகரங்களில் கடந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து இச்சட்டம் நடைமுறைக்கு வந்திருகிறது. சீனத்து வர்த்தக நகரான ஷங்காயில் இது முதலில் அறிமுகமாகிறது. அனாவசியமாக ஹோர்ன் அடிப்பபர்கள் அபராதம் செலுத்த வேண்டியிருக்கும். நகரின் பொதுப் பாதுகாப்பு பிரிவினரே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

இந்த சட்டத்திற்கு பொலிஸாரும் விதிவிலக்கல்ல. அனாவசியமாக ஒலி எழுப்பிக் கொண்டு பொலிஸார் போனால் அவர்களும் தப்பிக்க முடியாது.

இலங்கையிலும் இப்படி நடந்தால் நன்றாக இருக்கலாம். ஆனால் ஜம்பட்டா வீதியை என்ன செய்வதாம்??


இருக்கிறம்

காத்திருப்பு 1
இருக்கை 1

ஒரு பொல்லாப்பும் இல்லை

ஈகோ பப்ளிசிங் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட்டால் வெளியிடப்படுகிறது.

ஆசிரியர்
இளையதம்பி தயானந்தா
நிர்வாக ஆசிரியர்
மனோ ராஜசிங்கம்
ஆசிரியர் குழு
எஸ்.ரஞ்சகுமார்
சாந்தி சச்சிதானந்தம்
அப்துர் ரஃமான்
வ.சிவஜோதி

தலைமை ஓவியர் மதி புஷ்பா
வடிவமைப்பு க.மயூரன், கே.முஜீன்
கணிணித் தட்டச்சு கா.புவனலோஜினி



தொடர்பு
3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07
தொலைபேசி: +94 60 2150836 +94 11 2506272
தொலைநகல் +94 11 2585190
மின்னஞ்சல் irukkiram@gmail.com




கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே.
இதழில் வரும் விளம்பரக்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல


# தெளிவான இலக்கு

நாங்கள்
ஆட்சிக்கு வரும் போது
தெளிவாகச் சொன்னோம்
இது
மக்களை இலக்காகக் கொண்ட அரசென்று
நாங்கள்
வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்கும் போது
மிகத் தெளிவாகச் சொன்னோம்
இது
மக்களை இலக்காகக் கொண்ட திட்டமென்று
நாங்கள்
எங்கள் இலக்குகளில்
தெளிவாயுள்ளோம்
குண்டுகளையும் ஷெல்லுகளையும்
வீசும் போது கூட..!

நிலாக்கீற்றன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிடிவாதமும் துர்க்குணங்களும் நிரம்பிய ஒரு பெண்ணை காந்தாரி என்று குறிப்பிடுவது வழக்கம். காந்தாரி பிடிவாதம் உடையவள்தான். ஆனாலும் மிகநல்லவள். மகாபாரதத்தை ஆழ்ந்து படித்தவர்களின் முடிவு இது. துர்க்குணங்கள் கொண்ட ஒருவர் மீது இயல்பாக ஏற்படும் வெறுப்பு அவர்கள் அழகற்றவர்கள் என்ற எண்ணத்தைத் தருகின்றது. உண்மையில் காந்தாரி ஒரு பேரழகி என்கிறது மகாபாரதம். அத்துடன் அவள் மிகவும் பக்தி உடையவள். புகுந்த வீட்டுக்கு அவள் வரும் போது ஒரு சிவலிங்கத்தையும் கொண்டு வந்தாளாம். அவளுடன் கூடவே வந்து குலத்துக்கே குழி பறித்தவன் அவளது சகோதரன் சகுனி.

காந்தாரம் எனும் தேசத்தின் இளவரசிதான் காந்தாரி. அது இன்றைய ஆப்கானிஸ்தானின் ஒரு பகுதி. அதன் தற்போதைய பெயர் கந்தஹார்.

மேற்கிலிருந்து வருபவர்களுக்கு சீனாவுக்கும், இந்தியாவுக்கும், ரஷ்யாவுக்குமான இலகுவான நுழைவாயில் ஆப்கானிஸ்தான். அங்கிருந்து கைபர் கணவாயினூடாக இந்தியாவுக்கு வரலாம். மஹா அலெக்ஸாண்டரும், அரேபியர்களும் ஒடுங்கிய, நீண்ட, ஆளரவம் குறைந்த இந்தக் கணவாயினூடாகவே இந்தியாவுக்குள் கையில் ஏந்திய வாளுடன் நுழைந்தார்கள்.


ஏசுநாதர் அன்றைய ஆப்கானிஸ்தானில் பலவருடங்கள் சுற்றித் திரிந்திருக்கிறாராம். காந்தாரியும் அவ்வாறு சுற்றித் திரிந்திருக்கலாம். மனதில் எண்ணற்ற வண்ணக் கனவுகளுடன் பரிவாரங்கள் புடைசூழ, சீர்வரிசைகளும் சிவலிங்கமும் கொண்டு சகோதரனின் வழித்துணையுடன் கைபர் கணவாயினூடாக கடினமான நெடும் பயணம் செய்து வந்த ஒரு பேரழகியை ஒரு குருடன் மணமகனாக வரவேற்றது வரலாற்றின் துன்பியலுக்கு ஒரு நல்ல உதாரணம். அன்றிலிருந்து கண்ணையும் மனதையும் இறுகக் கட்டிப் போட்டு விட்டாள் அந்தக் காபூல் இளவரசி.



ஆப்கானிஸ்தான், காபூல், கந்தஹார் என்ற பெயர்களெல்லாம் தலிபான்களையும் அல் - ஹைடாவையும், பின் லாடனையும், தீராத யுத்த வடுக்களையும் எம்முன் கொண்டு வருகின்றன. ஆதிகாலத்தில் சீனாவுக்கும் அரேபியாவுக்குமான பட்டு



# நிலவு மறைக்கும் சூரியன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி ஆப்கானிஸ்தான் ஊடாகச் சென்றது. இன்று அது எண்ணெய் வழியாக மாறியிருக்கிறது. அதுவே இவ்வளவு துயரங்களுக்கும் காரணம்.



இந்தத் துன்பக் கேணியிலிருந்து ஒரு துளி நீரைப் பருகத் தருகிறது 'கந்தஹார்' என்னும் திரைப்படம். Mohsen Makhmalbaf (எப்படி இவர் பெயரை தமிழில் எழுதுவது?) என்ற கலைஞன் எழுதித் தயாரித்து இயக்கிய இத்திரைப்படம் 2001 ஆம் ஆண்டு வெளிவந்தது.

'சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்று யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமானவர்களுக்கு செயற்கைக் கால்களை வழங்குகின்றது என்பதாக' ஒரு வரியில் சொல்லி விடுவது செய்தியாளர்களின் பணி. ஆனால் வாழ்வின் வலிகளை உணரச் செய்யும் கலைஞர்களின் பாணியோ வேறு.

அந்தக் கடைசிக் காட்சி இருக்கிறதே!.... இன்று வரும், நாளை வரும் என்று மாதக் கணக்கில் செயற்கைக்கால்களுக்காக காத்திருந்த காலிழந்தவர்களுக்காக விமானத்திலிருந்து அவை வீசப்படுகின்றன. அவர்களுக்கு எட்ட முடியாத தூரத்தில் அவை சிதறி விழுகின்றன. அவற்றைப் பொறுக்கி கொள்வதற்காக ஊன்று கோல்களின் துணையுடன் முண்டியடித்து நொண்டியபடி ஓடுகிறார்கள். அவர்களது துண்டிக்கப்பட்ட கால்களின் மொண்ணையான பகுதிகள் திரை முழுவதும் துள்ளுகின்றன. ஓரிரு நிமிடங்களுக்கு அந்த துண்டிக்கப்பட்ட கால்களின் வாழ்வுக்கான துடிப்பு மட்டுமே திரையில் தெரிகின்றது.


சந்தர்ப்பம் வாய்த்தால் நீங்களும் பாருங்கள். சந்தர்ப்பம் தானே வரும் என்று காத்திராமல் - நல்ல திரைப்படங்களை எங்கே பார்க்கலாம்?! - 'இருக்கிறம்'-இணையுங்கள்.



"நேவிக்காரங்கள் எல்லாம் இப்ப கொழும்பில நிக்கிறாங்கள்"

"ஓம் இஞ்ச றோட்டெல்லாம் கடல் மாதிரி. அப்ப அவங்களுக்கு தங்கட இடம் மாதிரித்தானே"





# வெள்ளைக் காகிதம்

கலீல் ஜிப்ரான் - மிட்டாய் கதைகளிலிருந்து.

காலைப் பனிப்போல் தூய்மையாக இருந்த
ஒரு வெள்ளைக் காகிதம் 'நான் ரொம்ப
சுத்தமானவனாக்கும்' என்று
அலட்டிக்கொண்டது.

'நான் பிறக்கும் பொழுதே தூய்மையாகப்
பிறந்தேன். காலம் முழுவதும், நான்
இவ்வாறே தூய்மையாக இருப்பேன்.
என்னை
எரித்துச் சாம்பலாக்கினாலும் பரவாயில்லை,
பொறுத்துக் கொள்வேன். ஆனால்
கறுமையின் இருள் கைகள் என்னைத்
தொட அனுமதிக்க மாட்டேன்,
தூய்மையற்றவர்கள் யாரும் என் பக்கத்தில்
கூட வரமுடியாது.

இந்தப் பேச்சைக் கேட்ட மைப்புட்டி,
குலுங்கிக் குலுங்கிச் சிரித்தது. அந்தக்
காகிதத்தின் பக்கத்திலேயே
செல்வதில்லை என்று முடிவுக்கட்டிக்
கொண்டது.

பல வண்ண பென்சில்களும் இதைக்
கேட்டன. அவையும், அந்தக் காகிதத்தை
நெருங்க வில்லை.


ஆகவே, அந்த பால் வெள்ளைக் காகிதம்,
அதன் ஆசைப்படி, என்றென்றும்
தூய்மையோடும், கற்போடும் வாழ்ந்தது.


வெறுமையாகவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ(ரசி)யலில் இவரைப்போல முயல்வது கடினம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸென் தத்துவங்கள்

## ஓர் எளிய அறிமுகம்

禪

**ஸென்** என்றால் அதன் நேரடி அர்த்தம் நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? இந்த வார்த்தையும் அது தாங்கிப்பிடிக்கும் தத்துவமும், அதன் பின்புலமும், உண்மயாகவே அதன் மகோன்னமும் இங்கு எத்தனை பேருக்குப் புரிகிறது.

புத்த மதத்தின் இரு பிரிவுகளில் ஒன்றான மஹாயான புத்தமதத்தின் ஒரு வகைதான் இந்த ஸென். சீனாவில் தோன்றிய இந்தப் பிரிவை தோற்றுவித்தவன் ஒரு தமிழன் என்பது ஆச்சர்யமான அதே நேரத்தில் அதிகப் வெளியில் வராத உண்மை.

'போதிதர்மா' என்கிற மாமனிதன் தந்த கொடைதான் இந்த ஸென். ஏறத்தாழ 1400 ஆண்டுகளுக்கு முன்னர். பல்லவ அரசனொருவனின் மூன்றாவது மகவாக பிறந்தவர்தான் இந்த போதிதர்மா. பௌத்த மதத்தில் ஈடுபாடு கொண்டு அரச போகங்களை உதறிய புத்தரின் கொள்கைகளை பின்பற்றத் துவங்கிய போதிதர்மாவின் குரு ஒரு பெண்மணி. பெண் ஒருவரின் துறவை மட்டுமல்ல, தனித்த ஒரு பெண்ணையே இன்னும் சரிவர புரிந்து கொள்ளாதவர்கள் நாம் என்பது தனியானதொரு விடயம்.

'பிரக்யதாரா" என்கிற பெண்மணிதான் போதிதர்மாவின் குரு. குருகுல வாசம் முடித்த அவரை அவரின் குரு சீனாவுக்கு செல்லுமாறு பணித்ததாகத் தெரிகிறது. அதற்கு சுவையான ஒரு காரணமும் சொல்லப்படுகிறது.



அந்தக் கால கட்டத்தில்தான் சீனா கன்ஃப்யூசியஸ் தத்துவங்களில் இருந்து மெல்ல புத்தரின் போதனைகளை நோக்கி திரும்பிக் கொண்டிருந்த வேளை எனலாம். புத்தரின் எண்ணங்களை தேர்ந்த ஒரு மெய்ஞ்ஞானியால் மட்டுமே பிரதிபலிக்க முடியும் என்ற காரணத்தால்தான் அவர் சீனாவுக்கு செல்லப் பணிக்கப்பட்டார் என்கிற கதையும் உண்டு.

சீனாவில் ஒன்பது ஆண்டுகளாக தொடர்ந்து அவர் போதனைகள் செய்தார். அதன்பிறகு தனக்கான வாரிசை தெரிவு செய்ய முற்பட்டார். தனது நான்கு சீடர்களையும் அழைத்து தனது கேள்விக்கு சரியான பதிலை எவர் தருகிறாரோ அவரையே தனது வாரிசாக நியமிப்பதாகவும், அவருக்கே தன்னையும் தனது ஞானத்தையும் தானமாக தருவதாகவும் அவர் கூறினாராம்.

எந்த வார்த்தைகளுமற்ற மௌனமே அவரின் கேள்வியாக அமைந்தது. அதற்கு பதில் தர வந்த முதலாவது சீடன் "மௌனமே எல்லாவற்றையும் ஆரம்பிக்கும்" என்றான். போதிதர்மா அவனிடம் ' உனக்கு என்னுடைய தோல்' என்றார். இரண்டாவது சீடன் "நானில்லை ஆனால் இருக்கிறேன், இருப்பதால்" என்பதே குருவின் கேள்விக்கு பதில் என்றான். அவனிடம் 'என் சதை' உனக்கு என்றாராம் குரு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூன்றாமவன் "சொல்லமுடியாது" என்று விளக்கம் தந்தான், 'உனக்கு என் எலும்புகள் சொந்தம்' என்று ஆசீர்வதித்தார் குரு. நான்காவது சீடன் பதில் தர வந்தான். எதுவும் கூறாமல் குருவை மௌனமாக வணங்கினான். அவனுக்கே தனது ஆன்மா சொந்தம் எனக் கூறி அவனையே தனது வாரிசாகவும் நியமித்தார் என்று சொல்லப்படுகிறது.

தோலும் எலும்பும் சதையும் மட்டுமே போதாது, ஆன்மாதான் நிரந்தரம் என்பதை உணர்த்தவே இந்த வாரிசுத் தேர்வுக் கதை சொல்லப்படுவதாகக் கூறப்படுகிறது. போதிதர்மா அவரது சீடர்களாலேயே கொல்லப்பட்டார் என்று கர்ணபரம்பரையாக சொல்லப் பட்டாலும் அதற்கு மூன்றாண்டுகள் கழித்து இமயத்தின் பனிமுகடுகளில் அவரை பலர் பார்த்ததாகவும் கூறப்பட்டது.

**ஸென் – என்னதான் சொல்கிறது**

"நெஞ்சுக்குள் நேரடியாக உள் புகுவதே என் தத்துவம்" இப்படித்தான் போதிதர்மா ஸென் பற்றி குறிப்பிடுகிறார்......

ஸென் என்பதை நிலாவை காட்டும் விரல் என்றும் குறிப்பிடுவதுண்டு. ஸென் என்பது அனுபவம் அதை விளக்க முயலும் கதைகள், விடுகதைகள், கவிதைகள் ஆகியவையே அந்தச் சுட்டும் விரல்கள். விரலைப் பார்த்தால் நிலா தெரியாது. நிலாவை பார்த்தபின் விரல் தேவைப்படாது. நிலவை தேடுபவன் முதலில் விரலைப் பார்த்து அது காட்டும் நிலாவை பார்க்க முடியும். ஸென் விளக்கப்படுவதை விட உணரப்பட வேண்டியது......

**ஸென் எதைத் தேடுகிறது?**

"You are a citizen of two worlds - the inner and outer. There should be a bridge between these two worlds" Swami Rama

இல்லாத ஒன்றை தேடுவதுதானே உண்மையான தேடலாக இருக்க முடியும். இல்லாதது என நிஜத்தில் எதுவுமே இல்லை... எல்லாமே இருக்கிறது, நமக்கு அது தெரியாததால்தான் அதைத் தேடல் என்கிறோம்.

தேடுபொருட்கள் புதிதாய் எங்கிருந்தும் முளைக்கவில்லை, இங்கேதான் எங்கேயோ இருக்கிறது. சரியான தேடலும், தேடுபொருளும் ஒன்றாய் நேர்கோட்டில் இணையும் போது உற்சாகிக்கிறோம். இது தற்செயலாகவும் நடக்கலாம் அல்லது ஆசை, நிர்பந்தம், அச்சம் போன்ற காரணிகளாலும் இருக்கலாம்.

தேடுபொருள் எதுவாகவும் இருக்கலாம், இளமையில் காதல், திருமணமாகிவிட்ட பிறகு நிம்மதி (சொந்த அனுபவம்), முதுமையில் மரணம் இப்படியாக தேடலுக்கு



" நீ உனக்குள் இருக்கும் இயற்கையை பார். விழித்துக்கொள்வாய் "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணங்கள் கிடையாது, கடவுள் தொடங்கி காமம், பொருள், புகழ், அதிகாரம்,போதை என இது பரந்து விரிகிறது. எப்போதும் தனிமனிதனின் வசதியாகவே இவை இருந்து வருகின்றன. வேண்டியதையும் தேடுகிறோம், வேண்டாததையும் தேடுகிறோம். உண்மையில் ஸென் 'தேடாதே' என்றே சொல்கிறது.

ஆம்...வெளியில் தேடாதே, எல்லாவற்றையும் உனக்குள் தேடு என்கிறது ஸென். கடவுள் என்ற வார்த்தைகூட எல்லாவற்றையும் கடந்து உள்ளே தேடு என்பதையே குறித்து நிற்கிறது.இதை இந்திய தத்துவவாதிகள் 'சுயதரிசனம்' என்கின்றனர். தன்னைத்தானே தேடித் தரிசனம் பெறுவது அத்தனை எளிதல்ல, உன்னையே நீ அறிவாய் என்று சோக்கிரட்டீஸ் சொன்னதும், உன்னை நீயே காதல் கொள் என்று வள்ளுவன் சொல்வதும்போல, தன்னையறிதல் நீள்கிறது. அது ஒரு தவம் ...சிலருக்கு தவம் மட்டுமே வாய்க்கும், சிலருக்கு வரங்களும் கிடைக்கலாம். ஆனால் தேடல் உண்மையானதாய் இருக்க வேண்டும்.

நண்பர்களே.... தேடுவதற்கு தீர்மானம் மட்டுமே போதுமானது. எமதையும் அறிந்துகொள்ள பக்குவம் வேண்டும். இலக்கில்லாமல் எதை வேண்டுமானாலும் தேடலாம். உண்மைத் தேடலின் விளைவாய் உண்மைகள் புலப்பட ஆரம்பிக்கும், இந்த உண்மை எங்கே இருக்கும்?, ஒரு வேளை மனதின் மையத்தில் இருக்குமா...அதைத்தான் இவர்கள் கடவுள் என பெயரிட்டு அழைக்கிறார்களோ?...

ஸென் மேலோட்டமான விஷயமில்லை...அதன் ஆழம் நோக்கி பயணிக்க பயணிக்க வசீகரமாய் விரியும் சுகானுபவம் அது.

சுகங்களும் ஸென்னும் நீளும்.........

---

கண்ணாடியைத் துடைக்கத் துடைக்க

என் முகத்தின் அழுக்கு

மேலும் தெளிவாகிறது.

-வைத்தீஸ்வரன்-





# இதுதாண்டா தத்துவம்



என்னதான் அகிம்சாவாதியா இருந்தாலும்
ரொட்டியை சுட்டுத்தான் சாப்பிட முடியும்.

பச்சை மிளகாயில பச்சை இருக்கும்.
ஆனாக் குடை மிளகாயில குடை இருக்காது.

மெழுகை வைச்சு மெழுகுவர்த்தி செய்யலாம்.
ஆனாக் கொசுவை வைச்சு கொசுவர்த்தி செய்ய முடியாது.

நீ என்ன பெரிய நீச்சல்காரனா இருந்தாலும்
மூக்குப்பேணித் தண்ணீல நீந்த முடியாது.

Files -கள் இருந்தா, இருந்து பாக்கலாம்.
Piles - ஆ இருந்தா பாத்துத்தான் இருக்கோணும்.

என்னதான் நெருப்புக் கோழியா இருந்தாலும்
அதால அவிச்ச முட்டை போட முடியுமா?

நாய்க்கு நாலு கால்கள் இருந்தாலும்
அதால காலுக்கு மேல கால் போட்டு இருக்க முடியுமா?

வாயால நாயெண்டு சொல்லலாம். ஆனா
நாயால வாய் எண்டு சொல்ல முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் உலகு

உதாரணம் கூற எதையுமே மீதம் வைக்காத பூமிக்காரர்களுக்கு, இப்போது புதிதாய் ஒரு பூமி கிடைத்திருக்கிறது. ஐரோப்பிய விண்வெளி ஆய்வாளர்கள் சித்திரையில் ஒரு புதிய பூமிப் புத்திரனை பெற்றெடுத்துள்ளனர். சிலி நாட்டில் நிறுவப்பட்டுள்ள ஈசோ 3.6 தொலைநோக்கு கருவியை பயன்படுத்தி இப்புதிய கோளை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பிரபஞ்சத்தின் இரண்டாவது பூமியை தாம் கண்டுபிடித்துவிட்டதாக அவர்கள் அறிவித்துள்ளனர். பூமியிலிருந்து 20.5 ஒளியாண்டு தூரத்தில் இந்த இரண்டாவது பூமி கண்டறியப்பட்டுள்ளது. இக்கிரகம் சிவப்புக் குள்ளன் என்றறியப்படுகிற சின்னதோர் நட்சத்திரத்தை சுற்றிவருகிறது. இதனைச் சுற்றிவர இக்கோள் எடுத்துக்கொள்ளும் காலம் வெறும் பதின்மூன்று நாட்கள் மட்டுமே. சூரியனைப் போல கண்கூசும் பிரகாசத்தைக் கொண்டிராத இந்த நட்சத்திரத்திற்கு மிக அருகிலேயே இப் புதிய பூமி சுற்றுகிறது. பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலான தூரத்தைவிட பதினான்கு மடங்கு குறுகிய தூரத்திலேயே இச்சுற்று நிகழ்கிறது.

பூமியைப்போல தட்ப வெப்ப நிலையை இக்கிரகம் கொண்டிருப்பதால் அங்கு தண்ணீர்-திரவ வடிவத்தில் கிடைக்கலாம் என்று நம்பப்படுகிறது. அங்கு உயிரினங்கள் வாழும் வாய்ப்பும் மிக அதிகம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இதன் வெப்ப நிலை 0 முதல் 40 பாகை செல்சியஸாக இருப்பதால் திரவ நிலையில் தண்ணீர் இருக்கும் வாய்ப்பு இருப்பதாக ஜெனீவா ஆய்வாளர் ஸ்டெபெனோ உட்ரி கூறுகிறார். இனிவரும் காலங்களில் விண்வெளிப் பயணிகளின் முக்கிய இலக்காக இருக்கப் போவது இந்த இரண்டாவது உலகாகவே இருக்கும் என்கிறார் மற்றொரு கண்டுபிடிப்பாளரான 'சேவியர் டெல்போஸ்.' இந்த நம்பிக்கைகளும் கூற்றுக்களும்தான் இக்கிரகத்தை இரண்டாவது பூமி என்பதைவிட, மீநிலையுலகு (Super Earth) என்று பெயரிட்டு அழைக்க வைத்திருக்கிறது.

இந்த மீநிலையுலகின் விட்டம் பூமியைப்போல இரண்டரை மடங்கு இருக்குமென்றும், அதன் தரைப்பகுதியில் பாறைகளும் கடல் பகுதிகளும் இருக்கும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். விண்வெளி மற்றும் அறிவியல் உலகில் பலத்த பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் இக்கண்டுபிடிப்பைவிட, லொட்ஜுகளில் இருந்து மக்களை வெளியேற்றத் தீர்மானித்தது யார் என்பதை சரிவரக் கண்டுபிடிப்பதில்தான் எங்கள் கவனம் அதிகமாய் திரும்பியிருக்கிறது என்பது வேறு விடயம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராட்சத வௌவால்

த.தர்மேந்திரா

எனக்கு கம்பியூட்டர் காதல் எண்டு ஒண்டு இருக்குதெண்டு சத்தியமா தெரியாமல் தான் இருந்தது. கேதீஸ்தான் எனக்கு அப்படி ஒண்டு இருக்குதெண்டு சொல்லி தந்தவன், ஓமோம் அது வித்தியாசமான அனுபவம்தான்.

எந்த நாட்டில் இருந்தாலும் இன்ரநெற் மூலமா வெளிநாட்டுக் காரரோடயும் லவ் பண்ண ஏலுமாம்(உள்நாட்டிலதான் கனகாலமா ஒண்டுமே முடியுதில்லையே) சற்றிங் சற்றிங் எண்டு அதைச் சொல்லுறது. இளம்தாரி வட்டத்திட்ட இது நல்ல பேமஸ். பல பொடியளும் பொட்டையளும் இண்டைக்கு இன்ரநெற்றில சற்றிங் ரூமுக்கு போய் அடை காக்கிற கோழியள் மாரி மணிக் கணக்கா தொடர்ந்து காத்திருக்கினம்.

இப்படியான ஆக்களில ஒருவன் தான் நான் சொன்ன கேதீஸ். யாழ்பாணத்தில இருந்து இடம் பெயர்ந்து வந்த கேதீஸிட குடும்பம் கொழும்பில ஒரு சொந்த வீட்டில இருக்குது. அவன் என்ர குளோஸ் பிரண்ட். கனகாலமா அப்பிடித்தான் நம்பிக் கொண்டிருந்தனான்.

நான் ஒருநாள் வெள்ளவத்தையில இருக்கிற அவன்ர வீட்ட போனன். அங்க போய் அவையின்ர விசிற்றிங் ரூமில இருக்கிறன். அவன் ஒருக்கா வெளியில வந்து வெள்ளைக்காரன் ஸ்ரயிலில 'ஹாய்' எண்டதோட சரி, பிறகு தன்ர ரூமுக்கு திரும்பப் போனவன்தான். என்னைச் சல்லிக் காசுக்கும் கணக்கு எடுக்கேல்ல. எனக்கு கோபமாகவும் கிடந்தீச்சு,அவன்ர போக்கு கொஞ்சம் புதினமாவும் கிடந்தது. இருந்தாலும் நகர வாழ்க்கையில மனுஷ உறவுகளுக்கு மதிப்புக் குறைவு எண்டு மனசைச் சமாதானப் படுத்தி கொண்டன்.

"ஆன்ரீ, கேதீஸிற்கு கிட்டடியில எக்ஸாம், இன்ரவியூ எண்டு என்னெண்டாலும் இருக்கோ, அறையை விட்டு வெளியில வாரான் இல்லையே"


அவனுடைய அம்மாட்ட நான் கேட்டன்

"இல்லைத் தம்பீ அவர் இன்டநெற் யூஸ் பண்ணுறார் ஏன் அவரை வெளியில் எங்கையும் கூட்டிக் கொண்டு போகப் போறீரோ? இஞ்ச பாரும் கொழும்பில ஒரே பிரச்சனை, வீட்டோட



ஒழுங்கா இருக்கிற பிள்ளைய, அங்க இங்கயெண்டு கொண்டு திரிஞ்சு கடைசீல வவுனியாவுக்கு பஸ் ஏத்திப் போடாத ராசா"

அவ கொஞ்சம் கண்டிப்பாதான் சொன்னவ. எனக்கு மனசில சுருக்கெண்டு ஏதோ தைச்சது போல இருந்தது. கொஞ்ச நேரம் பேசாம இருந்தன்.



"அன்ரீ அவற்ர ரூமுக்கு போகட்டோ எனக்கும் இன்டநெற் பழக ஆசையா இருக்குது"

நான் அன்ரியின் பதிலுக்கு காத்திராமலே கேதீஸின் ரூமுக்குள்ள போனன். நான் என்னை ஒரு துப்பறியும் நிபுணனக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைச்சபடி கதவைச் சத்தமில்லாமல் திறந்து அறைக்குள்ள அடி மேல் அடி வச்சு மெதுவா கேதீஸுக்குப் பக்கத்தில நெருக்கமாக நிண்டன். அவனோ இந்த உலகத்திலயே இல்லை. நான் பொறுமையின்ர எல்லை வரை போய் கடைசில அவன்ர தோளில கை வைச்சன். அவன் திடுக்கிட்டு போனான். அவன் என்னை பேய் பிசாசை பார்ப்பது போல முழுசி முழுசி பார்த்தான் நான் ஒண்டுமே நடக்காதது போல கொஞ்சம் எட்ட இருந்த கதிரையை அவனுக்கு கிட்டவாப் போட்டுக் கொண்டு பக்கத்தில இருந்தன். எனக்கு அவன் செய்யுற வேலையள பார்க்க, கோயிலில ஐயர் சொல்லுற மந்திரம் போல இருந்தது, ஐ.பி.கே.எவ் ஆக்கள் வந்து நிக்கேக்க அவையள்ல கொஞ்ச பேருக்கு அந்த மந்திரங்களும் விளங்கினதாம், இஞ்சயெண்டால் சத்தியமா எனக்கு ஒண்டுமே புரியேல்ல.

அவன் எனக்கு கொஞ்சம் மதிப்பு கொடுத்தான் பாருங்கோ, நான் அங்க குந்தி ஒரு அரை மணித்தியாலத்துக்கு பிறகு திருவாய் மலர்ந்து' நான் சற்றிங் பண்ணிக் கொண்டிருக்கிறன் மச்சான்' எண்டான். கொஞ்ச நிம்மதியோட தொடர்ந்தும் அவன் செய்யிறதை பார்த்துக் கொண்டு இருந்தன்.

நான் அவதானமா கவனிச்சுக் கொண்டிருந்த அந்த நேரம் பார்த்து கரண்ட் நிண்டு போச்சு. பவர் கட் வந்தபிறகு, இவன் பாவி சுடு தண்ணி பட்ட நாய் மாதிரி ஓடித் திரியத் தொடங்கினான். எனக்கு உண்மையில உள்ளுக்க சந்தோசம். கரண்ட் போனதால இவன் ரூம விட்டு வெளியில வந்து கதைக்க போறான் எண்டு நினச்சபடி நான் அனுதாபப் படுவது போல "என்னடா மச்சான்?" எண்டு கேட்டன் " இந்த கோதாரி போன கரண்ட் நிண்டிட்டுது. அவ சற் ரூம விட்டு வெளியில போகப் போறா" எண்டான். 'ஆரடா அது? ஏதும் காதலோ?' ஆச்சரியத்தோட நான் கேட்டு முடிக்க முந்தியே, "உனக்கு பகிடியா இருக்குதோ?" எண்டு அவன் தன்ர எரிச்சலை என்னில கொட்டித் தீர்த்தான்.

ஒருவாறு கரண்ட் திரும்ப வந்தது. நான் எலக்ரி சிற்றி போட் ஐ மனதுக்குள்ள சபித்தேன். அவன் ஓடிப் போய் கம்பியூட்டரை ஓன் பண்ணி இன்ட நெற் எக்ஸ்புளோரருக்கு போய் யாகூ மெசேஞ்சரால ஒரு மாதிரி சற் ரூமுக்கு போனான். அவன் முகம் சுருங்கியது. அவனோட சற் பண்ணிக் கொண்டிருந்த குட்டி எழும்பி போய் விட்டாவாம் "ச்ச் அவ எழும்பி போயிட்டா" அவனுடைய ஆதங்கத்தை நான் புரிந்து



கொண்டாலும், அவனும் இனி கம்பியூட்டரை விட்டு எழும்பி என்னோடை வரப் போறான் எண்டு தப்புக் கணக்கு போட்டுட்டன்.

"ஆள் போயிட்டா தானே, எழும்பன் மச்சான் கொஞ்ச நேரம் நாங்கள் எங்கட கதையள கதைப்பம்"

நான் மெதுவா நிதானமா என்ர கோரிக்கையை அவனிட்ட விட்டன். அவன் என்னை ஒரு முட்டாளைப் பார்க்கிற மாதிரிப் பார்த்தான்.

"மடையா மாலா போனா மல்லிகா வருவா ரேக் ற் ஈ சி'" எண்டான்

எனக்கு எலக்ரிக் சொக் அடிச்ச மாதிரி இருந்தது. நான் ஏமாற்றத்தோட அவனுடைய அறைய விட்டு வெளியில வந்தேன்.

கேதீஸின் தம்பி அப்ப தான் பள்ளிக்கூடத்தால வீட்டுக்கு வந்திருந்தான். அவனுக்கு கதை கேட்கிறதில பெரிய ஆசை. அவன் 'அண்ணா ஏதும் கதை சொல்லுங்கோ' எண்டு என்னைச் சுற்றிச் சுற்றி வந்தான். நான் சொல்லத் தொடங்கினன்.

" அமெரிக்காவில ஒரு விசித்திரமான இராட்சத வெளவால் இருந்தது. அது இரவு நேரங்களில பசுப் பண்ணைகளை தேடிப் பறந்து செல்லும். பண்ணையில உள்ள கொழுத்த பசுவுக்கு மேலாக பறந்து பறந்து இறக்கைகளை அது அசைச்சு அசைச்சு விசிறிக் கொடுக்கும். இந்த விசிறலால கிடைக்கிற சுகத்தில மயங்கி பசு கண்ணை மூடித் தூங்கும். இந்த வெளவால் மெதுவாக பசுவின் தலையில குந்தி பசுவின்ர காதுப் பகுதிகளில இருந்து இரத்தத்தை மெதுமெதுவாக உறிஞ்சிக் குடிச்சிட்டு திருப்தியோட பறந்து போடும்."

கேதீஸின்ர தம்பிக்கு நான் சொன்ன கதை விளங்கினதோ என்னவோ, உங்களுக்கு விளங்கினா சரி.காதுகள் கவனம்.



விமானம் : நண்பா எப்படி இவ்வளவு வேகமா பறக்கிறாய்
ரொக்கெட் : போடாங்ங்ங் கொய்யா.... உனக்கு பின்னால தீ வெச்சா தெரியும்டா தீ.........



உங்கடை மனைவியிட்டை உங்களுக்குப் பிடிச்ச விசயம் என்ன?

என்ன சண்டை வந்தாலும், கோபம் இருந்தாலும் , என்னோடை சமையல்ல மட்டும் குறையே சொல்ல மாட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சா பற்றி எண்ண(ச்) சஞ்சலங்கள்

தி. திருக்குமரன்

என் பின்னார் சா தொடர்ந்து
இழுபட்டு வருகிறது
பிறந்தது முன்னிருந்து
பிறப்பறுக்க வென்றெந்தன்
பின்னாலே சா தொடர்ந்து
இறப்பதற்கு வருகிறது.

நான்·பெரியார் 'நான்' என்று
நாட்டாண்மை காட்டையிலும்,
பதவிக் கதிரை புகழ் பகர்கையிலும்,
இழவொன்றில்
அனாவசியச் சா வென்று
அலசையிலும், பிடரியின் பின்
சந்தர்ப்பம் பார்த்தபடி
சாலத்தில் நிற்கிறது.

உள் உருக்கும்
உடல் நோயில்,
ஓடுகின்ற வாகனத்தில்,
மெல்ல மெல்ல குறி தேடும்
குழல் இரும்பு விசை நுனியில்,
முக்கியமாய் என் வாயில்

வாழ்க்கை வரைத்திட்ட
வண்ணக் கனவுகளை
வழித்துத் துடைத்தப்படி
வருகிறது.



நான் பிறக்கும் போதே
உடன் பிறந்து போகையிலும்,
ஒன்றாக உடன் கட்டை
ஏறிடுவேன் என்பதுவாய்
'எனது சக பயணி ஆகிச்சா வருகிறது'
ஆயிடினும் ஊழி வரை
ஆண்டு என் வாழ்வு
அனுபவிக்குமெனு மெண்ணம்
அடிக்கடி என் நடத்தைகளில்
தெரிகிறது.
மனுச மனம்
தொல்லைகளைத் தோண்டித்
தோளாக்கிச் சுமை கனத்தும்,
இருப்பென்றால்
இன்மையென்றிருந்தும்

இருக்காமல்
ஓடுபட்டெங்கும்
உலைகிறது.
ஒரு கணத்தில்
விடைபெறுதல் பற்றி,
வீரர்கள் வரலாறு
உடைபட்டோடும் காலக்
காட்டாற்றில் அடிபட்டு
தடையங்களே இன்றித்
தாழும் வகை பற்றி,
ஒளிப்படங்கள் போல் முன்னால்
ஓட,
இமைப்பொட்டில்
உண்மைத் தீ பற்றி ஓங்கி எரிகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டாரத் தமிழ் வேண்டாம்

தமிழை வட்டார வழக்கின் அடிப்படையில் பிரிக்கக் கூடாது. வட்டாரச் சொற்களைக் கொண்டு நூல்களை இயற்றவும் கூடாது. எண்ணங்களை வெளியிட உரைநடை போல எதுவும் இல்லை. தற்போது மண்ணின் வாசனையுடன் தமிழில் நூல்கள் வருகின்றன. ஆனால் சமீப காலமாக வெளியிடப்படும் நூல்களில் வட்டாரச் சொற்கள் அதிகம் தலை தூக்குகின்றன. இந்தப் போக்குத் தொடர்ந்தால் தமிழ் பல தமிழாகப் பிரியும் நிலை ஏற்படும். பின்னர் எந்தத் தமிழ் சிறந்த தமிழ் என்ற தேவையில்லாத விவாதங்களும் ஏற்படலாம்.கடைசியில் தவறான மொழியுச்சரிப்பு உடையதே நல்ல தமிழ் என்ற நிலையும் ஏற்படலாம். தமிழை வட்டார வழக்கில் பிரிக்கக் கூடாது. வட்டாரங்களில் புழங்கும் சொற்களைக் கொண்டு நூல் எழுதக் கூடாது. வட்டாரச் சொற்கள் இடம் பெற ஊக்கம் தரக் கூடாது. தமிழைத் தமிழாக, பிழையில்லாமல் அச்சில் ஏற்ற வேண்டும்

**அமைச்சர் அன்பழகன்**

## தலித்துகளின் மொழியே அசலானதும், அழகானதும்

சாதியத் தன்மையுடனும், ஆண் ஆதிக்கத் தன்மையுடனும் இருந்த மொழியை, தலித் எழுத்தாளர்களே உடைக்கத் துணிந்தார்கள். மொழி, இலக்கணம் 'நீச பாஷை, 'இழிசனர் வழக்கு' என்று தலித் மக்கள் பேசும் மொழியை தீண்டத்தகாததாக்கியிருந்தது. இந்த மொழித் தீண்டாமையைத் தகர்த்தது தலித்துகளே. அவர்களே, இழிசனர் வழக்கை இயல்பாய் தம் பிரதிகளில் பயன்படுத்தத் தொடங்கினர். பாமா, பேச்சு வழக்கையே தனது கதையின் கூறு மொழியாக்கிக் கொண்டார். ராஜகௌதமனின் நாவல்களும் அப்படியே. அண்மையில் வெளியான 'வடு'வும் அதே மொழி நடையிலேயேதான் வெளிவந்துள்ளது.



மக்களிடம் புழக்கத்திலிருக்கும் இயல்பான அல்லது அப்பட்டமான மொழி, இலக்கியத்தில் கையாளப்படுகிற போது, மொழியின் மீது பூசப்பட்டிருக்கும் கட்டுப்பாட்டுத் தளைகள் உடைபடுகின்றன. கழிவுகளை அள்ளுவோர் என்பதைவிடவும்,மலம் அள்ளுவோர் என்ற வார்த்தைப் பிரயோகம், சிந்தனையின் அடுக்குளில் அதிர்வுகளை உருவாக்குகிறது. மலிவான கவன ஈர்ப்புக்கும், அதிர்ச்சி மதிப்பீட்டுக்கும்தான் தலித் எழுத்தாளர்கள் வெளிப்படையான சொற்களைப் பயன் படுத்துகிறார்கள் என்றொரு குற்றச்சாட்டு தொடர்ச்சியாக இந்த மொழி உடைப்புச் செயல் பாட்டின் மீது வைக்கப்பட்டு வருகிறது. வெறும் அதிர்ச்சி மதிப்பீட்டிற்காக மட்டும் ஒரு தலித் தன் மொழியைப் பயன்படுத்துவதில்லை. அவர் தனது கோபத்தை இடம் மாற்றும் ஊடகமாக , ஆயுதமாக மொழியைக் கையாள்கிறார். சில இடங்களில் அவர் பயன் படுத்தும் சொற்களுக்கு மாற்றாக, வேறொரு சிறந்த சொல் இருக்கவே முடியாது. தலித் மொழி குறித்த மற்றொரு கருத்தும் இங்கே உண்டு. எந்த மொழியும் அதன் பூர்வகுடி மக்களாலேயே பாதுகாக்கப்படுகிறது. அவர்களே அதை அம்மொழியின் அழகோடு பயன்படுத்துகிறார்கள். எனவே, தலித்துகளின் மொழிப் பிரயோகத்தை அவர்கள் இயல்பாய் கையாளலாம்.

-அழகிய பெரியவன்



நீங்கள் நினைத்தால் வளர்க்கவும்
நினைத்தால் மழிக்கவும்
தமிழ் ஒன்றும் உங்கள்
தாடியோ மீசையோ அல்ல

-வாலி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாளமாதித்தியனும் சாராயமும்

**கற்பனை பேட்டி**

*அதி நவீன கவிஞர் வேதாளமாதித்யன் அவர்கள் முனியன் சாராயக் கடையில் இலக்கிய கூட்டம் வைக்கப் போவதை அறிந்து நம்முடைய தினம் ஒரு குவாட்டர் (தி.ஒ.கு) மின் குழுத் தொலைக்காட்சி சார்பாக பேட்டி எடுக்கச் சென்றோம். வாசலிலேயே குடியும் தாடியுமாக இருந்த அவரை கும்பிடு போட்டு ஓரமாக உட்கார்ந்து பேச ஆரம்பித்தோம்...*

நாம் :- வணக்கம் திரு வேதாளம் அவர்களே உங்களுடைய கவிதை இலக்கியக் கூட்டத்தை சாராயக் கடையில் வைத்ததற்கு ஏதேனும் காரணம் உண்டா?

வேதாளம்:- சாராயத்தை சாராயமாகப் பார்த்தால்தான் தவறு சாராயம் உனக்கு என்ன த்வறு செய்தது? சாராயம் ஒரு பானம் அவ்வளவுதான்.

நாம் :- உண்மையிலேயே அதுதான் காரணமா?

வேதாளம் :- உண்மையைச் சொல்லலேன்னா உட மாட்டீங்களே ..ம்..ம்...ம்ம் நம்ம பசங்க பாதிபேரு சாராயம் வாங்கிக் கொடுத்தால்தான் கவிதை கேப்பேன்னு அடம் புடிக்கிறாங்க. என்ன பண்ண சொல்றீங்க? அப்படியே சைட்ல ஊறுகாயும் கடிக்கிறோம்.

நாம்:- நீங்க தண்ணி அடிச்சுட்டுதான் கவிதை எழுதறீங்கன்னு உங்களைப் பற்றி ஒரு புகார் உலாவுது உண்மையா?



வேதாளம் :- எழுதறதுக்கு முன்னாடி கொஞ்சம் தண்ணி அடிப்பேனே தவிர தண்ணி அடிச்சிட்டு எழுதுறதில்லை.



நாம் :- உங்க கவிதைகளை நீங்க எப்படி எழுதறீங்க?
(இந்தக் கேள்வி கேட்கும் போது ஊறுகாயைக் கடித்துக் கொண்டே கொஞ்சம் போதையோடு பேச ஆரம்பிக்கிறார் வேதாளம்)

வேதாளம் :- என்னோட பையன் இருக்கானே..அவன் தாங்க எனக்கு எல்லாம். அவனுக்கு இப்போ ஆறு வயசு. பாக்கிறதை எல்லாம் ஒவ்வொரு வார்த்தையா அல்லது சின்ன வசனமா, தனித்தனி துண்டு பேப்பர்ல எழுதி ஒரு பொட்டில போடச் சொல்லுவேன். கவனமா கேட்டுக்கோங்க. அப்புறம் எத்தனை வரி கவிதை வேணும்னு பார்ப்பேன். 5 வரி கவிதைன்னா 5 துண்டை அதில இருந்து குலுக்கி எடுப்பேன். அதை அப்படியே வரிசையா எழுதிடுவேன். கடைசில 'எனக் கழியும் ஜீவிதம்'னு போட்டுடுவேன். கவிதை ரெடி.

நாம்:- ஓ நல்ல ஐடியாவா இருக்கே?



வேதாளம்:- கடைசியா நான் குலுக்கின, மன்னிக்கனும் எழுதின கவிதையை வாசிக்கவா?

நாம் :- கண்டிப்பா (என்றபடி காதைக் கூர்மையாக்குகிறோம்)

வேதாளம் :-

உடைந்த பாலப்பம்
வால் நக்கும் சொறி நாய்
காணாமல் போன செருப்பு
கருவாடு
போஸ்ட் மேன்
எனக் கழியும் ஜீவிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம்:- ஆயா அற்புதம் இதுக்கு என்னங்க விளக்கம் கொடுக்கிறீங்க?

வேதாளம் :- அது குடிச்சிட்டு தான் யோசிக்கணும். சில நேரம் விமர்சனம் எழுதற நண்பர்கள் ஏதாவது பெரிய பெரிய விளக்கம் சொல்லுவாங்க. அதையெல்லாம் நோட் பண்ணிக்குவேன். அதுல எது நல்லா இருக்கோ. அதுதான் கவிஞனோட சிந்தனைன்னு சொல்லிடுவேன்.

நாம் :- உங்களுக்கு கடந்த மாதம் கொடுக்க இருந்த விருதை வேண்டாம்னு சொல்லிட்டீங்களாமே?

வேதாளம் :- அதையேன் கேட்கறீங்க. அந்த சமயத்துல நான் எழுதின கவிதைக்கு அப்படி ஒரு விளக்கம் கொடுத்து விருது வர விடாம தடுத்துட்டாங்க விமர்சகர்கள்.

நாம் :- அதென்ன கவிதை

வேதாளம் :-

டிவி ஓடவில்ல
காலிலே கல்லு இடிச்சுடுச்சு
பல்லு ஆடுது
யாருக்கு வேணும் இது
எனக் கழியும் ஜீவிதம்...

இதுதான் அந்தக் கவிதை. இந்தக் கவிதைல விருதெல்லாம் எனக்கு வேண்டாம்னு சொல்லியிருக்கேனாம். சத்தியமா நான் அப்படியெல்லாம் சொல்லலீங்க.குலுக்கி எடுத்தப்போ இப்படி வந்துச்சு அவ்ளோ தான்.

நாம்:- ஆமா உங்க கவிதைகளுக்கும் சூரியமுத்து கவிதைகளுக்கும் கருத்தளவுல சில ஒற்றுமைகள் இருக்கு. ஆனா நீங்க வேற வேற விதமா எழுதறீங்க சரிதானே?

வேதாளம்:- எதை வெச்சு சொல்றீங்க ?

நாம் :- உதாரணமா

எதிர்பாரா
ஆச்சரியங்கள் பூச்சொரியும்
என்று தான்
வாழ்க்கைச் சுவடுகள்
வாசலைத் தாண்டுகின்றன...

என்னும் சூரியமுத்துவின் கவிதையும்,



நிச்சயமற்ற சஞ்சாரங்களால்
முனகித் தொடர்கிறது
எனக் கழியும் ஜீவிதம்.

என்னும் உங்களுடைய கவிதையும் அடிப்படையில் ஒன்றுதானே. பிறகெப்படி உங்கள் கவிதைகளை புதியவை என நியாயப் படுத்துகிறீர்கள்.

வேதாளம்:- மண்ணின் மணத்தை மண்டியிட்டு நாசியால் நுகர்ந்து பார்த்து அந்த மண்ணின் பாஷையை சப்திக்காத நாக்குகளின் குரல்களுக்கு, என் செவிகள் செவி கொடுக்காது.

நாம்:- புத்தகத்துல உங்க ஊர் நாகர் கோவில்னு போட்டிருக்கீங்க. ஆனா நீங்க திருச்சிக்காரர் தானே?

வேதாளம்:- என்னோட பூர்வீகம் தெலுங்கு. நான் கடலை வியாபாரத்துக்குதான் தமிழ் நாடு வந்தேன். கோர்வையா நாலு வார்த்தை எழுதத் தெரியாததால நான் நவீன கவிதை எழுதறேன்னு யாராவது சொன்னா நம்பிடாதீங்க.

நாம் :- ஐயையோ...என்னங்க கவிதை புத்தகத்தை கிழித்து கை துடைக்கிறீங்க ?

வேதாளம்:- என் புத்தகத்தால சமுதாயத்துக்கு பயனில்லை என்பதை மாற்றிக் காட்டணும் இல்லையா அதான்.

நாம்:- சரிங்க மிக்க நன்றி. நீங்க இன்னும் நிறைய குடிக்கணும்....சாரி.. படைக்கணும்னு வாழ்த்தறோம். இப்போ கிளம்பறோம்.

வேதாளம்:- போயிட்டு வாங்க போகும் போது அப்படியே சாராயத்துக்கும் ஊறுகாய்க்கும் காசு கொடுத்துட்டு போயிடுங்க.




சேவியர் -

இண்டர்வியூவுக்கு வந்த என்னட்ட தாத்தா, பாட்டி பற்றி விசாரிக்கினம்.

ஓமய்யா..வேலைக்குச் சேர்ந்ததும், அவங்கள் செத்துட்டாங்கள் இவங்கள் போய்டாங்கள் எண்டு அடிக்கடி லீவ் போடக் கூடாதெண்டுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனம் தெரியாத நபர்களைத் தேடல்

எல்லோரும் இப்போது கணிணிகளை மிக அதிகமாக பயன்படுத்து-கிறார்கள். பலர் தமது ஆக்கங்களை வலைப் பூக்களாக்கி (Blogs) வருகிறார்கள். இப்படி வலைப் பூக்களை வைத்திருப்பவர்கள் உலகெங்கும் இருந்து அப்பதிவை இணையம் மூலம் பார்வையிடும் பல பயனர்களை சந்திக்கிறார்கள். அப்படி வரும் பயனர்கள் தமது கருத்துக்களையும் தந்து செல்வதுண்டு.இங்கே ஒரு பிரச்சனை எழுகிறது. நல்லவிதமாகவோ அல்லது படு மோசமாகவோ குறிப்புக்களை பதிபவர் யார் என்று தெரிந்து கொள்ள முடிவதில்லை. இப்பிரச்சனைக்கு இப்போது ஒரு இணையத்தளம் தீர்வு தர முன்வந்துள்ளது. www.statcounter.com என்ற முகவரியில் உள்ள இணையத்தளத்தில் நீங்கள் நுழைந்தால், பல விடயங்களை தெரிந்து கொள்ள முடியும்.








வல்லுவெட்டி நாட்டில் ஒரு சீமான்
வள்ள வணிகர்க் கிடையே கோமான்
நெல்லு வெட்டி எஞ்சுகிற
வைக்கோலாய் வன்னிக்காட்டு
எல்லை விட்டுச் செல்லும் அவன் சாமான்

மகாகவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்றிற்கு விண்ணப்பிக்க விரும்புகிறீர்களா?


ஒரு நிறுவனம் பற்றிப் படியுங்கள்

- வெளிநாட்டு நிறுவனம் ஒன்றில் வேலைக்காக இணைய விரும்புவோர் அங்கு பணியாற்றுவோர் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய சில கீழே தரப்படுகிறது.
- பணியாளர்களில் 29 பேருக்கு கட்டிய மனைவிமாரோடு நித்தியப் பிரச்சனை.
- ஊழல் குற்றச்சாட்டின் பேரின் ஏழுபேர் கைதாகியிருக்கிறார்கள்
- கள்ளக் காசோலை எழுதிய குற்றச்சாட்டு 19 பேரின் மீது சுமத்தப் பட்டிருக்கிறது.
- பணியாளர்களில் மொத்தம் 117பேர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வங்குரோத்துக்கு உள்ளானவர்கள்.
- மூன்று பேர் அடிபாடுகளில் ஈடுபட்டவர்கள்.
- வங்கிகளில் தவறான கணக்குகளை வைத்திருந்த காரணத்தால், இங்கு பணியாற்றுபவர்களில் 71பேருக்கு எந்த வங்கியும் கிரடிட் கார்ட் தருவதில்லை.
- போதைப் பொருட்களுடன் சம்மந்தப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் 14 பேரும், திருட்டுக் குற்றச்சாட்டின் பேரில் 8 பேரும் கைது செய்யப் பட்டவர்கள்.
- நீதிமன்ற வழக்குகளில் 21 பேர் பிரதிவாதிகளாக இருக்கிறார்கள்.
- 2003ம் ஆண்டு 84 பணியாளர்கள் குடித்து விட்டு வாகனம் ஓட்டிய குற்றச்சாட்டில் கைதானார்கள்.

இத்தனை பிரச்சனைகள் அந்த நிறுவனத்தில் இருந்தாலும் வெளிநாட்டு நிறுவனம்தானே சேர்ந்து விடலாம் என்று நீங்கள் நினைப்பீர். அதன் பெயரை அறியவும் ஆசைப் படுவீர்கள்.
அமெரிக்க காங்கிரஸ் எனப்படும் அமெரிக்கச் சட்ட மன்றம்தான் அது

நன்றி www.wirednewyork.com





## தூதுவர்

வானத்தின் தூதுவனாய் மழைவந்து போகிறது
ஆழ்கடலின் தூதுவராய்
அலைகள் வருகிறது.
திசைதிக்கின் தூதுவனாய் தென்றல் வந்தாடுகிறான்.
மரங்களது தூதுவனாய்
மலர்வாசம் வருகிறது—
இரவினது தூதுவனாய் நிலவொளியும்.
பகலினிலே
வருகின்ற தூதுவனாய் சூரியனும்.
மலைகளது
தூதுவராய் அருவிகளும்.
சுடர்நெருப்பின் தூதுவராய் பேரொளியும்
நிலத்தின் தூதுவராய் வயல்விளைவும்.
காலத்தின் தூதுவனாய் கடவுளும்.
இதயத்து
ஓசையதன் தூதுவனாய் உயிர்களும்.
எம்சொந்த
வாழ்க்கையதன் தூதுவனாய் வாய்ப்புகளும்,
நான்விரும்பும்
காதலதன் தூதுவனாய் உந்தனையும் நான் கண்டேன்—
இத்தனையாம் தூதுவர்கள்
இங்கே இருந்தாலும்
இத்தரை அமைதிக்கு என்று ஒரு தூதுவனும்
குத்தி முறிய இல்லை.-------
என்ற கொடுமையால் நம்
வாழ்வினது தூதுவனாய் யமன் வந்தான்------
ஊமையானேன்.




அருணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பு



## ஒட்டைகள்

களவு கொள்ளப்பட்ட எமது
வாழ்வைக் குறிக்கும் இது
இணையத்தில் களவாடப்பட்டது.
'இருக்கிறம்' இதையொத்த
புகைப்படங்களை உங்களிடம்
வேண்டி நிற்கிறது.
ஆயிரம் வார்த்தைகளை
அவை பேசட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருக்கிறம்

இருந்தும் .....
இல்லாமலும் !

இருந்தும் ,
இருக்கட்டும் .
இருப்போம் !

இருக்கட்டும் .

இருக்கிறம் !!
இருப்போமா ..?

இருப்பு ....
இருக்கிறதா ....?

இருக்கலாம் !

இறுக்கலாம் !!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org